124

திவ்யார்த்த தீபிகை

15.8.1938

12

12

JL
0222 m 211, N26
N38·12·12
155932

வழங்கியிருக்கையாலும் ஆவியென்னத் தட்டில்லை. [என்ஆவியைச் செய்தவாற்றை யானறியேன்] விபுவான தான் அணுவான வென்னைத் தன்னிலும்மேற்பட்ட (அல்லது, தன்னோடொத்த) ஆனந்தத்தையுடையேனும்படி பண்ணின விதம் ஆச்சரியம் என்றவாறு. .... (ச)

OFFICE OF
31 AUG 1938
MADRAS

ஆற்றநல்லவகைகாட்டும் அம்மானை * அமரர்தம்
ஏற்றை எல்லாப்பொருளும்விரித்தானையெம்மான்தன்னை *
மாற்றமாலைபுனைந்தேத்தி நாளும்மகிழ்வெய்தினேன் *
காற்றின்முன்னம்கடுகி வினைநோய்கள்கரியவே.

ஆற்ற	பொறுக்கப்பொறுக்க	விரித்தானை	விரிவாக உபதேசித்தானை
நல்ல வகை	விலக்ஷணமாயுள்ள (ஜ்ஞாந பக்திகள் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற) ப்ரகாரங்களை	எம்மான் தன்னை	எம்பெருமானை,
		வினை	பாபங்களும்
		நோய்கள்	பெரியவ்யாதிகளும்
காட்டும்	அடியார்களுக்குக் காட்டிக்கொடுக்கின்ற	காற்றின் முன்னம் கடுகி	காற்றிலும் வேகமாய் ஓடிப்போய்
அம்மானை	ஸர்வேச்வரனாய்	கரிய	வெந்துபோம்படியாக
அமரர் தம் ஏற்றை	நித்யஸூரி நாதனாய்	மாற்றம் மாலை புனைந்து	சொல்மாலையைத் தொடுத்து
		ஏத்தி	துதித்து
எல்லாப் பொருளும்	எல்லா அர்த்த விசேஷங்களையும (கீதோபநிஷந் முகத்தாலே)	நாளும்	ஸர்வகாலமும்
		மகிழ்வு எய்தினேன்	மகிழ்ச்சியைப்பெற்றேன்

* * * [ஆற்றநல்லவகை.] எம்பெருமான் அடியார்களுக்குச் செய்தருள நினைக்கும் நன்மைகளை ஒருகாலே செய்து முடிப்பதில்லை; பொறுக்கப் பொறுக்கச் சிறிது சிறிதாகச் செய்தருள்வன். ஆசார்யஹ்ருதயத்தில் இரண்டாவது ப்ரகரணத்திலுள்ள * புணர்தோறு மென்னக் கலந்துபிரிந்து * இத்யாதி சூர்ணிகை இங்கு அநுஸந்தேயம். அதன் கருத்தாவது — * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமிந் நின்ற நீர்மையினி யாமுறாமை யென்று ப்ரார்த்தித்தபோதே ஆழ்வாருடைய அபேக்ஷிதம் செய்துவிடலாமாயிருக்க இவரை இந்நிலத்திலே வைத்துத் தன்னுடைய ஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே ஜ்ஞானபக்திகளை வளர்த்தது ஏதுக்காக வென்னில்; கனமான கர்ணபூஷணமிடுதற்கு இடமாம்படி நாலிட்டுத் திரியிட்டுக் குதம்பையிட்டுக் காது பெருக்குமா போலவும், ஒருமாஸம் உபவாஸமிருந்தவர்களுக்கு முதலிலே போஜனமிட்டால் பொறாதென்று சோற்றையரைத்து உடம்பிலே பூசிப் பொரிக்கஞ்சி கொடுத்துப் பொரிக்கூழ் கொடுத்து நாளடைவிலே போஜனம் பொறுப்பிக்குமா போலவும், பகவதநுபவம் கனக்கண்டறியாத இவர்க்கு அதிசிலாக்யமாய் நித்யஸூரிகள் அநுபவிக்கிற போகத்தை முதன் முதலிலே கொடுத்தால் ஸாத்மியாதென்று கருதி அது ஸாத்மிக்கைக்காக ச்ரமம் செய்வித்தபடி என்கை.

ஆற்ற நல்லவகை இன்னருக்குக் காட்டும் என்னுமையாலே இது பொதுவிலே சொன்னதித்தனை. ஆழ்வாரிடத்திலே ஸமந்வயம் காணலாம்.

எல்லாப்பொருளும் விரித்தானை—அறியவேண்டியபொருள்களையெல்லாம் பகவத்கீதை முகமாக விரித்தருளிச் செய்தவனென்றபடி. அப்பொருள்களாவன;—ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம், அசித்திற்காட்டில் சித்துக்குண்டான வாசி, ஆத்மாக்களின் நித்யத்வம் தேஹங்களின் அநித்யத்வம், ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவித்தலாகிற நியாமகத்வம் ஈச்வரனுக்கேயுள்ளதென்பது, பக்திமான்கள் நிமித்தமாகவும் அவதார ப்ரயுக்தமாகவும் அவன் எளியனாகின்றானென்பது, ஆச்ரயிக்குமிடத்து அனைவர்க்கும் ஸமனாயிருக்கிறானென்பது (அதாவது) அறிவு ஒழுக்கம் ஜாதி முதலியவற்றால் ஏற்றத்தாழ்வு பெரிது முடைய எவ்வகுப்பினர்க்கும் ஒருங்கே ஆச்ரயணீயனாக இருத்தல், அஹங்காரதோஷம், இந்த்ரிய ப்ராபல்யம், மற்றை யிந்திரியங்களிற் காட்டிலும் மநஸ்ஸினுடைய ப்ராதாந்யம், நான்கு வகைப்பட்ட ஸுக்ருதிகளின்பேதம், தேவாஸுரவிபாகம், விபூதியோகம், விச்வரூபதர்சநம், ஸாங்கபக்தி, அங்கப்ரபத்தி ஸ்வதந்த்ரப்ரபத்தியாகிற இருவகை ப்ரபத்தி—என்றிப்படிப்பட்ட பொருள்களாம். ஸ்ரீவசநபூஷணத்தில் முதல் ப்ரகரணத்தில்—"அறியாதவர்த்தங்களையடைய அறிவித்து" என்றவிடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தில் இவ்வர்த்த விசேஷ விவரணம் நன்கு காணத்தக்கது.

இப்படி எம்பெருமான் பண்ணின வுபகாரத்திற்குக் கைம்மாறு காணமையாலே ஏத்தினேன், அதுதிருவாய்மொழியாய்த் தலைக்கட்டிற்று; துக்கங்களும் துக்கஹேதுவான கருமங்களுமெல்லாம் விரைவாகவே தொலைந்தன வென்கிறார். காற்றில் முன்னங்கடுகி என்றது—விரைவின்மிகுதியைச்சொன்னபடி. (ரு)

கரியமேனிமிசை வெளியநீறுசிறிதேயிடும் *
பெரியகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
உரியசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேற்கு *
அரியதுண்டோவெனக்கு? இன்றுதொட்டுமினியென்றுமே. (சு)

கரிய மேனி மிசை	(திருக்கண்ணின்) கரிய விழியின் மேலே	இசை மாலைகள்	இசைவடிவான மாலைகளையிட்டு
வெளிய நீறு	அஞ்சன நீற்றினை	ஏத்தி	துதித்து
சிறிதே இடும்	அளவாக அணிகிற	உள்ள	அநுபவிக்க
பெரிய கோலம்	அளவிறந்த அழகினையுடைய	பெற்றேற்கு எனக்கு	பெற்றவனான எனக்கு
தடம் கண்ணன்	விசாலமான திருக்கண்களை யுடையனாய்	இன்று தொட்டும்	இன்று தொடங்கி
விண்ணோர் பெருமான் தன்னை	நித்யஸூரிகளுக்குத் தலைவனான ஸர்வேச்வரனை	இனி என்றும்	இனிமேலுள்ள காலம் எல்லாம்
உரிய சொல்	(இவ்வழகுக்குத்) தகுதியான சொற்களாலே	அரியது உண்டோ	துர்லபமாயிருப்பது ஒன்றுண்டோ

159932

* * * [கரியமேனிமிசை.] 'ஆழ்வீர்! உமக்கு வேண்டுவது என்?' என்று எம்பெருமான் கேட்க, இதுவரையில் நான் பெறாதே இனி ஸாதித்துத்தரவேண்டுவதொரு பொருளுண்டோவென்கிறார். [கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதேயிடும்] இதற்குப் பலவகையாகப் பொருள் பணிப்பர்கள். மேலே "பெரிய கோலத்தடங்கண்ணன்" என்று திருக்கண்களின் ப்ரஸ்தாவமிருக்கையாலே கரிய மேனி மிசை என்றது—திருக்கண்களில் கருவிழியினுடைய கறுத்த நிறத்தால் வந்த அழகுக்கு மேலே என்றபடி. வெளிய நீறு சிறிதேயிடும்—அஞ்ஜன சூர்ணத்தை மங்கலமாகச் சிறிது அணிந்து கொள்ளுகிற என்றபடி. "வெளியம்—அஞ்ஜனம்" என்று பன்னீராயிரம். வேதாந்த தேசிகன் தாத்பர்யரத்நாவளியில் இப்பாசுரத்திற்காக "கர்ப்பூராலேபசோபே" என்றருளிச் செய்திருக்கக்காண்கையாலே, சாமளமான திருமேனியிலே பச்சைக்கருப்பூர தூளியையணிந்து கொள்ளுகிற என்றும் பொருள் கொள்ளலாம். வெளிய என்றது வெள்ளிய என்றபடி.

கரி அம்மேனிமிசை வெளிய, நீறு சிறிதேயிடும் என்றுகொண்டு, கரி—குவலயாபீட யானையானது, அம்மேனிமிசை—கண்ணபிரானது அந்தத் திருமேனியிலே, வெளிய—சீறிப்பாய்ந்தவளவிலே, சிறிதே—க்ஷணகாலத்திற்குள், நீறு இடும்—அந்த யானையைப் பொடிபடுத்தின—என்றானும் ஒருதமிழன்.

உரிய சொல்லால்—திருவாய்மொழிக்கு இது அஸாதாரணமான பெருமை. ராமகதையைச் சொல்லுவதாக ராமாயணமென்று தொடங்கி, கங்கையின் உற்பத்தி, ஸுப்ரம்மண்யனுடைய உற்பத்தி, புஷ்பகவர்ணநம் முதலான கதைகளைப் பரக்கப் பேசுவதால் அஸத்கீர்த்தநம் பண்ணி வாக்கிலே அசுத்தி படைத்தான் வால்மீகி; 'நாராயண கதை' என்பதாகத் தொடங்கி ஸம்பவபர்வத்திலே பீஷ்மர் முதலான பற்பலருடைய உத்பத்தி ப்ரகாரங்களை விரிவாகப்பேசுகையாலும், 'பூசல்பட்டோலை' [யுத்த புஸ்தகம்] என்னும்படி பாரதப்போர் வகைகளையே பரக்கநின்று வருணித்த படியாலும் அஸத்கீர்த்தனத்திலே மிகவும் பரந்து அசுத்திபடைத்தான் வேத வ்யாஸபகவான். ஆகவிப்படி, தொடங்கின படிக்குச் சேராமே அஸத்கீர்த்தநத்தைப் பண்ணி வாக்கை அசுத்தமாக்கிப் பின்பு "[illegible]—அஸத்கீர்த்தந காந்தார பரிவர்த்தந பாம்ஸுலாம், வாசம் சௌரிகதாலாப கங்கயைவ புநீமஹே." என்று அதற்கு சுத்திபண்ண வேண்டாதபடி "திருமாலவன் கவி யாது கற்றேன்" (திருவிருத்தம்) என்று திருமால் விஷயமான கவியென்று அடியில்வாயோலை யிட்டபடியே இதர விஷயஸம்பந்தமுள்ள ஒரு சொல்லும் ஊடு கலசாதபடி சொற்களைத் தெரிந்தெடுத்து விஷயத்திற்குத் தகுதியான சொற்களாலே அருளிச் செய்ததிறே திருவாய்மொழி.

இப்படித் திருவாய்மொழிபாடி அநுபவிக்கப் பெற்ற வெனக்கு இனி அருமையானது எதுவுமில்லை யென்றாராயிற்று. .... (சு)

என்றுமொன்றாகி ஒத்தாரும்மிக்கார்களும் * தன்தனக்கு
இன்றிநின்றானை எல்லாவுலகுமுடையான்தன்னை *
குன்றமொன்றால்மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள் *
நன்றுசூட்டும்விதியெய்தினம் என்னகுறைநமக்கே? (எ)

என்றும்	பரத்வம் முதலான ஸர்வாவஸ்தைகளிலும்	குன்றம் ஒன்றால்	மலை ஒன்றினாலே
ஒன்று ஆகி	ஒரேப்ரகாரமுடையனாய்க்கொண்டு	காத்த பிரானை	தடுத்த மஹோபகாரகனானவனைக்குறித்து
ஒத்தாரும் மிக்கார்களும்	ஸமராயும் அதிகராயும் இருப்பார்	சொல் மாலைகள்	சொல்மயமான மாலைகளை
தன் தனக்கு	தனக்கு	நன்று சூட்டும் விதி	அவன் ஆதரித்துச்சூடும்படி சூட்டுகைக்குற்ற பாக்கியத்தை
இன்றி நின்றானை	இல்லாமலிருப்பவனாய்	எய்தினம்	கிட்டப் பெற்றோம்; (ஆதலால்)
எல்லா உலகும் உடையான் தன்னை	எல்லாவுலகத்தையும் தனக்குசேஷமாகவுடையனாய்,	நமக்கு என்ன குறை	நமக்கு ஒருகுறையுண்டோ?
மழை	மழையை		

* * * [என்று மொன்றாகி.] கீழ்ப்பாட்டில் "அரியதுண்டோ வெனக்கு இன்று தொட்டு மினியென்றுமே" என்று செருக்குத் தோற்றப் பேசினார். இத்தகைய செருக்கு எத்தாலே வந்ததென்ன, எம்பெருமானருளாலே வந்ததென்கிறாரிப் பாட்டில்.

பரமபத நிலயனாய் நிற்கும் நிலைமையோடு, மநுஷ்யாதி ஸஜாதீயனாய் அவதரிக்குமவதாரங்களோடு வாசிபற எல்லா நிலைமைகளிலும் தன்னோடு ஒத்தவர்களும் மேம்பட்டவர்களு மின்றிக்கே யிருப்பவனாய், ஸகல லோகங்களையும் தனக்கு சேஷமாகவுடையனாய், அந்த சேஷவஸ்துக்களுக்கு இந்திரனால் நேர்ந்த ஆபத்தை, கண்டதொரு மலையாலே போக்கினவனான ஸர்வேச்வரனைத் திருவாய்மொழியாகிற சொல்மாலைகளாலே அழகாக அலங்கரிக்கும்படியானபாக்கியம்பெற்றோம்; ஆனபின்பு நமக்கு ஒரு குறையுண்டோ வென்கிறார்.

என்றும் ஒன்றாகி என்றது—மேலே சொல்லப்படுகிற, ஒத்தாரும் மிக்கார்களும் தனக்கு இல்லாமையாகிற விஷயம் எல்லா நிலைமைகளிலும் ஒரேவிதமாகவேயிருக்கு மென்றபடி. பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரமென்கிற நிலைமைகளுக்குள்ளே ஒவ்வொரு நிலைமையும் ஒத்தாரும் மிக்காருமின்றி யிருக்கு மென்கை.

தன்தனக்கின்றி நின்றானை என்கிற விடத்திற்கு ஒருவிசேஷார்த்தமுண்டு, ஆளவந்தார் மகனார் சொட்டைநம்பி பணித்தாராம்;—"தன்தனக்கு என்றது தானான தனக்கு என்றபடி: ஒருவகைக்கு ஒப்பின்றிக்கே யிருக்கிறது பரத்வத்தில்

அல்ல; 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்கிறபடியே, அவதரித்து மனிச்சு ஏறிட்டுக்கொண்டு நிற்கிறநிலையிலே" என்று.

மேலே கூறப்பட்ட அர்த்தம் எந்தச் சொல்லிலிருந்து கிடைக்கின்றது? என்று ஆராயவேணும். கேண்மின்: தனக்கு என்னாமல் தன்தனக்கு என்றதில் உட்புகுந்து ஆராயவேணும்; ஸ்ரீபரதாழ்வானோடுகூட சித்திரகூடஞ் சென்ற வஸிஷ்டபகவான் ஸ்ரீராமபிரானை நோக்கி "த்ராதாநம நாதிவர்த்தேதா:— ஆத்மாநம் நாதிவர்த்தேதா:" என்றான்; 'தன்னைமீறாதே' என்பது சப்தார்த்தம். இங்கே ஆத்மாநம் என்பதற்கு-'உயிர் நிலையான பரதாழ்வானை' என்று சிலர் பொருள்கூறுவதுண்டு. அப்படியல்லாமல் பட்டர் அருளிச்செய்வதாவது—ஆத்மாநம் என்றது தானான தன்மையை யென்றபடி; தானான தன்மையாவது ஆச்ரித பாரதந்திரியம்; அதனை இழக்கவேண்டா என்பதாக. வடமொழியில் ஆத்மா என்பது போலத் தமிழில். தான் என்பதாம். அதுதன்னிலும் தனக்கு என்பதற்கும் மேலாக, 'தன்தனக்கு' என்கையாலே எம்பெருமானுடைய தானானதன்மையையே சுட்டிக்காட்டுகிற சொல் இது என்று கொள்ளவேணும். எம்பெருமானுடைய தானான தன்மை எதுவென்றால் ஆச்ரித பாரதந்திரியமே யென்பது கீழே மூதலிக்கப்பட்டது. ஆகவே, ஆச்ரிதபாரதந்திரனாக அவதரித்த விடத்திலே ஒத்தாரும் மிக்காரு மில்லாதிருப்பவன் என்றதாயிற்று. இதனால் தேறிய கருத்து யாதெனில்; எம்பெருமானுடைய பரத்வத்திற்கு எல்லைகண்டாலும் காணலாம்; அவனுடைய ஸௌசீல்யத்திற்கு அது காணமுடியாது என்பதாம்.

குன்றமொன்றால் மழைகாத்த வரலாறு:—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங்கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதிப்பதற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான் ஒருகால் அவனுக்கு இடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பலமேகங்களை ஏவி, கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகட்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குதரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தன மென்னும் மலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளினன் என்பதாம்.

இங்ஙனம் பூர்ணமான விஷயத்தை நாம் எங்ஙனம் பேசுவது! என்று கொண்டு மீளாமல், துணிந்து ஊடுருவப் பேசப் புகுந்த என்னுடைய பாக்கியமே பாக்கியம் என்றாராயிற்று. ... ... (எ)

நமக்கும்பூவின்மிசைநங்கைக்கும் இன்பனை * ஞாலத்தார்
தமக்கும் வானத்தவர்க்கும்பெருமானை * தண்டாமரை
சுமக்கும்பாதப்பெருமானைச் சொல்மாலைகள் * சொல்லுமாறு
அமைக்கவல்லேற்கு இனியாவர்நிகரகல்வானத்தே? (அ)

154937

நமக்கும்	நித்ய ஸம்ஸாரிகளான நமக்கும்
பூவின் மிசை நங்கைக்கும்	தாமரை மலரில் வசிக்கும் பெரியபிராட்டியாருக்கும்
இன்பனை	இன்பமளிப்பவனும்
ஞாலத்தார் தமக்கும்	லீலாவிபூதியிலுள்ளார்க்கும்
வானத்தவர்க்கும்	பரமபத வாஸிகளுக்கும்
பெருமானை	தலைவனும்

தண் தாமரை சுமக்கும்	குளிர்ந்த தாமரை மலர் சுமக்கும்படியான
பாதம் பெருமானை	திருவடிகளையுடையனுமான ஸர்வேச்வரன் விஷயத்தில்
சொல்மாலைகள்	திருவாய்மொழியை
சொல்லும் ஆறு	சொல்லும்படியாக
அமைக்க வல்லேற்கு	அமைதியைப்பெற்ற எனக்கு
அகல்வானத்து	அகன்றநித்யவிபூதியிலும்
யாவர் இனி நிகர்	யார்தான். இனி ஒப்பாவார்?

* * * [நமக்கும்.] ஆழ்வார், தம்பக்கலிலே எம்பெருமானுக்குண்டான அபிநிவேசத்தைக்கண்டு, இப்படிப்பட்ட எம்பெருமானைக் கவிபாட வல்ல எனக்குப் பரமபதத்தில் ஸூரிகளும் நிகரல்லர் என்கிறார்.

பெரியபிராட்டியாரிடத்திலும், அவளுடைய பரிகரமான நம்மிடத்திலும் ஸ்நேஹித்திருப்பவன் எம்பெருமான் என்று இந்த முறையிலே யிட்டுப் பாசுரமருளிச்செய்ய வேண்டியிருக்க, "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும்" என்று தம்மை முந்துறச் சொல்லிப் பிறகு பிராட்டியைச் சொல்லியிருப்பது கொண்டு ஒரு விசேஷார்த்தம் சிக்ஷிக்கப்படும். [ஆசார்யஹ்ருதயத்தில் இரண்டாம் பிரகரணத்தில்—"இன்பு மன்பும் முற்படுவது கொழுந்து விடுவதாகிறது" இத்யாதி சூர்ணிகை இங்கே அநுஸந்தேயம்.] எம்பெருமான் ப்ரீதிபண்ணுமிடத்தில், நித்யாநபாயிநியான பிராட்டியிற்காட்டிலும் அதிகமாகவே நம்மிடத்தில் பண்ணுவனென்னுமிடம் இதனால் அறியத்தக்கது. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;— "இன்பனு மிடத்தில் முற்பாடு இங்கேயாய்ப் பின்பாயிற்று அவளுக்கு ஸ்நேஹித்திருப்பது" என்று.

இவ்வர்த்தம் ஸ்ரீராமாயணத்தில் ஒரு ஸந்தர்ப்ப விசேஷத்தில் பெருமாளாலேயே வெளியிடப்பட்டது; எங்ஙனே யென்னில், பெருமாள் எழுந்தருளியிருக்கச்செய்தே இராவணன் கோபுர சிகரத்திலேவந்து தோன்றினவாறே 'ராஜத்ரோஹியான பயல் இங்ஙனம் கூச்சமின்றித் திருமுன்பே நிற்பதும் நீதியோ' என்று சீற்ற முற்ற ஸுக்ரீவமஹாராஜர் அவன்மேலே எழுப்பாய்ந்து மீண்டு வந்தபோது பெருமாள் "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம"—த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம?" என்றார்; 'உனக்கு ஓர் அநர்த்தம் விளையுமாகில் பின்னை ஸீதாபிராட்டிதான் எனக்குக் கிடைத்தென்ன?' என்பது இதன்பொருள். இதனால், பிராட்டி பக்கலிற்காட்டிலும் அடியவர் திறத்தில் எம்பெருமானுக்குள்ள அன்பின் கனம் அறியவெளிதாம்.

ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானை=இங்கும் வானத்தவர்க்கு முன்னே ஞாலத்தார் முற்படுகிறார்கள். இங்கே ஈடு:—"மாதாபிதாக்கள் ப்ரஜைகளில் குறைவாளர் பக்கலிலேயிறே இரங்குவது; அத்தாலே ஸம்ஸாரிகள் முற்படவேண்டுகிறது" என்று. நித்ய விபூதியிலுள்ளார்க்கு இரங்குவது மீனுக்குத் தண்ணீர்வார்ப்பது போலேயாமித்தனை. ஞாலத்தவர்க்கு இரங்குவதே பாலைநிலத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்தவாறும்.

தண்தாமரை சுமக்கும் பாதப்பெருமானை=குளிர்ந்த ஆஸநபத்மத்தாலே தரிக்கப்பட்ட திருவடிகளையுடையவனென்கை. எம்பெருமானுடைய திருவடிகளின் கீழே பத்மாஸநமிருப்பது அறியத்தக்கது. "அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ" என்றதும் இங்கு அநுஸந்தேயம். தண்டாமரையின் மீது விளங்குகின்ற பாதங்களையுடையவன் என்ன வேண்டுமிடத்தில் "தண்டாமரை சுமக்கும் பாதன்" என்றது ஒரு உத்ப்ரேக்ஷையில் நோக்காக. அதாவது—குளிர்த்தியிலும் பரிமளத்திலும் செவ்வியிலும் தாமரைப்பூவானது திருவடிக்குத் தோற்றுப்போயிற்று; தோற்றவர்கள் வென்றவர்களைச் சுமப்பது என்கிற ஒரு வியவஸ்தை உலகிற் காண்பதாதலால், தோல்வியடைந்த தாமரைப்பூ வெற்றி பெற்ற திருவடியைச் சுமக்கவேண்டியதாயிற்றுப் போலுமென்கை.

ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் இக்கருத்தை அமைத்து ஒரு ச்லோகமருளிச்செய்தார்;— * ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸுகந்த ஸப்ரவாஹை: தே ஹி ஸுந்தரபுஜஸ்ய பதாரவிந்தே | அம்போஜம் அப்பரிரம்பணம் அப்யஜைஷ்டாம் தத் வை பராஜிதமிமே சிரஸா பிபர்த்தி = ஸௌந்தர்யமார்தவ ஸுகந்தரஸப்ரவாஹை: ஏதே ஹி ஸுந்தரபுஜஸ்ய பதாரவிந்தே, அம்போஜடம்பபரிரம்பணமப்யஜைஷ்டாம் தத் வை பராஜிதமிமே சிரஸா பிபர்த்தி." என்பதாமது. அழகு, ஸௌகுமார்யம், நறுமணம், மகரந்தஸப்ரவாஹம் ஆகிய இவற்றாலே அழகருடைய இந்தத் திருவடிகளானவை தாமரையை வென்றிட்டபடியினால் தோல்வியடைந்த அந்தத் தாமரைப்பூ இந்தத் திருவடிகளைச் சுமக்கின்றது என்றவாறு.

இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்திலே சொல்மாலைகள் சொல்லுமாறு அமைக்கவல்ல எனக்குத் திருநாட்டிலும் இனி நிகரில்லை யென்கிறார்.

சொல்மாலைகள் சொல்லுமாறு அமைக்க வல்லேற்கு என்றவிடத்தில் நிர்வாஹ பேதமுண்டு; பட்டருக்கு முன்புள்ள முதலிகள் எப்படி நிர்வஹித்தார்களென்றால், ஆழ்வாரை நோக்கி ஸர்வேச்வரன் 'ஆழ்வீர்! நம்மைக்குறித்து ஒரு கவி சொல்லும்' என்றால் சிறிதும் மயங்காமல் அப்போதே சடக்கெனக் கவி சொல்லி முடிக்கும்படியான வல்லமை வாய்ந்த எனக்கு—என்று நிர்வஹித்துப் போந்தார்களாம்: பட்டர் நிர்வஹிப்பதாவது—மேலே ஏழாம்பத்தில் * என்னைக்கு மென்னை என்கிற திருவாய்மொழியிற்படி ஸர்வேச்வரன் தானே கவிபாடினதுகையாலே கவிபாடின ஸாமர்த்தியம் அவ்வளவாகப் பாராட்டத்தக்கதன்று; அந்த எம்பெருமான் திருக்கண்களாலே குளிரக் கடாக்ஷித்து 'நீர் ஒரு கவிசொல்லும்' என்றால், * உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தேன் *

என்னுங்கணக்கிலே சிதிலாகாமே தரித்து நின்று சொல்மாலைகள் சொன்ன தன்றோ பாராட்டத்தக்கது; அந்தத் தன்மையை ஆழ்வார் இங்கு அருளிச் செய்கிறார் என்றும், அமைக்க என்ற சொல்லின் ஸ்வாரஸ்யத்திற்கு மிகவும் பொருந்திய நிர்வாஹம் இது. அமைத்தல்—தரித்தல். .... (அ)

வானத்தும்வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும் * எண்டிசையும்தவிராதுநின்றான்தன்னை *
கூனற்சங்கத்தடக்கையவனைக் குடமாடியை
வானக்கோனை * கவிசொல்லவல்லேற்கு இனிமாறுண்டே?

வானத்தும்	ஸ்வர்க்கத்திலும்.	கூன்நல் சங்கம்	வளைந்தவடிவால் அழகிய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
உள்வானத்து உம்பரும்	அதுக்குள்ளாய்ப்பெரியதாயிருக்கிற மஹர்லோகாதிகளிலும்	தட கையவனை	பெரிய திருக்கையி லுடையவனும்
மண்ணுள்ளும்	பூமிக்குள்ளும்	குடம் ஆடியை	குடக்கூத்தினாலே ஸகல ஜனங்களையும் வசீகரித்தவனும்
மண்ணின் கீழ் தானத்தும்	பூமியின்கீழ் இருக்கிற பாதாள உலகத்திலும்,	வானம் கோனை	நித்ய ஸூரிகளுக்குத் தலைவனுமான ஸர்வேச்வரன் விஷயத்திலே
எண் திசையும்	இவற்றிலுண்டான எட்டுவிதமான பதார்த்தங்களிலும்	கவி சொல்ல வல்லேற்கு	கவி பாடவல்ல எனக்கு
தவிராது	ஒன்றிலும் நழுவாதபடி	இனி மாறு உண்டே	இனி எதிர் உண்டோ?
நின்றான் தன்னை	வ்யாபித்து நிற்பவனும்		

* * * [வானத்தும்.] இப்பாட்டு ஆழ்வாருடைய ஸர்வவிலக்ஷணமான பெருமையைக் காட்டுகின்றது. பரமபதத்திலுள்ள நித்யர்களென்ன, முக்தர்களென்ன, இவ்விபூதியிலுள்ள பராசர பாராசர்ய வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளென்ன, ஆகிய இவர்களெல்லாரிற் காட்டிலும் ஆழ்வார்க்குண்டான வைலக்ஷண்யம் இப்பாசுரத்தில் வெளியாகின்றது. எம்பெருமானுடைய பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்ற எல்லா நிலைமைகளிலும் புக்குக் கவி சொல்லவல்ல வெனக்கு எதிருண்டோ வென்கிறார்.

நித்யமுக்தர்கள் பரத்வமல்லது வேறொன்றையும் அறியார்கள். மஹர்ஷிகளில் வந்தால், பராசர பகவானும் வேதவ்யாஸபகவானும் க்ருஷ்ணாவதாரமல்லது மற்றொன்று அறியார்கள். வால்மீகி பகவான் ஸ்ரீராமாவதாரமன்றி யறியான். ஸநக ஸநந்தநாதிகள் அந்தர்யாமித்வத்திலே அதிகமாக ஊன்றியிருப்பர்கள். இங்ஙனே பார்க்குமிடத்து ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்று பாழியாயிருக்கும். நம்மாழ்வாருடைய தன்மை இங்ஙனேயன்று. * வானத்தும் வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்தானத்தும் எண்டிசையும் தவிராது நின்றானைக் கவிபாடவராயிற்றிவர். இங்கு விசேஷணம்ஸங்களில் முழுநோக்கு. விசேஷ்யபூதனான எம்பெருமான் விஷயத்திலே கவிபாடுதல் மற்றவர்கட்கும் உள்ளதேயானாலும், விசேஷணம்ஸங்களிலே தனித்தனியே புகுந்து அவ்வோ நிலைமைகளுக்கும் கவிபாடுதல் ஆழ்வா ரொருவர்க்கேயா மித்தனை.

முன்னிரண்டடிகளாலே எம்பெருமானுடைய ஸர்வவ்யாபகத்வம் சொல்லப்படுகிறது. இந்த வ்யாப்தியை மற்றையோர்கள் பேசுவதிற்காட்டிலும் ஆழ்வார் பேசுவதிலே சுவைமிக்கிருக்கும். "பரந்த தண்பரவையுள் நீர்தொறும் பரந்துளன்" என்பது முதலான பாசுரங்கள் காண்க.

எம்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்திலே சிலர் விப்ரதிபத்தி பண்ணிப் போருவர்கள். அணுவான பதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்ளீடாக வ்யாப்தி ஸம்பவிக்க மாட்டாதென்றும், ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூர்ண வ்யாப்தியை அங்கீகரிக்குமளவில் மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரஸக்தியில்லாமையாலே பரிஸமாப்ய வ்யாப்தியை அங்கீகரிக்கலாகாதென்றும் இங்ஙனே சில விப்ரதிபத்திகளைப் பண்ணுகிற்பர்கள். இவற்றுக்கெல்லாம் பரிஹாரமாக ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா என்கிற க்ரந்தம் இயற்றியுள்ளோம்; அதிலே பரக்கக்கண்டு கொள்வது. இங்கே சுருங்கச் சொல்லுகிறோம்.

சாரீரக மீமாம்ஸையில் * ஸ்வபக்ஷ தோஷாச்ச * [illegible] * என்கிற பூர்வபக்ஷ ஸூத்ரத்தின்மேல் * [illegible] * என்கிற ஸித்தாந்த ஸூத்ரம் அவதரித்துள்ளது. சாஸ்த்ரங்களினால் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்க மூலகமான குசோத்யங்களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசையவேண்டுமென்று இந்த ஸூத்ரம் சிக்ஷிக்கின்றது. ஆயினும் எம்பெருமானுடைய ப்ரபாவாதிசயத்தை ஸஹியாத சிலர் அப்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்தில் தமது விதண்டாகௌசலத்தை விளங்கச் செய்கின்றனராதலால் அன்னவர்கட்குத் தெளிவு உண்டாகுமாறு இஃது எழுதப்படுகின்றது. அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: என்று சுருதி ஓதிற்று. அணுவான வஸ்துக்களில் பகவானுடைய வ்யாப்தி எத்தகைத்து? என்று விமர்சிக்கவேண்டும். "நாராயணன் எல்லாப்பொருள்களையும் உள்ளும் புறமும் ஒக்க வியாபித்திருக்கின்றான்" என்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கின்ற உதாஹ்ருத ச்ருதி வாக்கியத்தில் சிறிது ஸங்கோசம் செய்ய வேண்டுமென்றும், ஜீவாத்மா நிரவயவனாகையாலே அந்தர்தேசம் [உள்ளிடம்] அற்றவனாதலால், தத்வ்யதிரிக்த வஸ்துக்களிலேதான் அந்தர் வ்யாப்தி கொள்ளவேணுமென்று பூர்வபக்ஷிகள் பகர்கின்றனர். 'எங்கு ஸாவயவத்வமில்லையோ அங்கு அந்தர் தேசம் இல்லை' என்று இப்படி ஒரு நியமம் சொல்லப்ரமாணமில்லை நிரவயவமான ப்ரதாநம் முதலியவற்றில் அந்தர் தேசம் உள்ளதாக அங்கீகரிக்கப்பட்டுமிருக்கிறது. அவ்யக்தம் அந்தர்கதம் நிரவயவம் என்று தத்வ முக்தாகலாபத்திலே தேசிகனுமருளிச் செய்தார்.

* யஸ்ய ஆத்மநி திஷ்஠ந் ஆத்மநோऽந்தர: இத்யாதி ச்ருதிகளாலும், ஸர்வம் [illegible] என்கிற கீதா

வசனத்தாலும் ஜீவாத்மாவிடத்திலும் அந்தர் வ்யாப்தி உண்டென்பது ஸ்பஷ்டமாகவே தெரிய வருகின்றது. [illegible] கீதாச்லோகத்தின் பாஷ்யத்தில் [illegible] [ஜீவாதபி ஸூக்ஷ்மதரம்] என்று எம்பெருமானார் அருளிச் செய்ததும் காண்க. ஜீவனுக்கு அந்தர் நேசத்தை அங்கீகரியாவிடில் ஸர்வானுக்கு ஜீவாத்மாபேக்ஷயா ஸூக்ஷ்மதரத்வம் நிர்வஹிக்கவரிது. * ஜீவாதபி ஸூக்ஷ்மதரம் * என்ற ஸ்ரீஸூக்திக்கு "ஜீவனைக்காட்டிலும் அபக்ருஷ்டபரிமாண முடையவன்" என்று பொருளல்ல. அப்படியாகில் எம்பெருமான் விபுவென்று கூறுகின்ற ச்ருதிஸ்ம்ருதிகள் பொருந்தாவாம். [illegible] அதற்குப் பொருளென்று கொள்ளவேணும்.

ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையில்—"[illegible] — [illegible]." என்றுள்ள திவ்யஸூக்தி ஶங்காஸ்பதமன்றிக்கேயுள்ளது.

ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் [illegible] என்றவிடத்தில் பட்டர், [illegible] வஸரத்தில் "[illegible]" என்றருளிச்செய்தார்.

திருவாய்மொழியில் (1—1—10) *பரந்த தண்பரவையுள்* என்கிற பாசுரத்தின் ஆறாயிரப்படியில் "அதிஸூக்ஷ்மமாயிருந்த அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித்வஸ்துக்களிலும் ஸ்தூலமான அண்டத்தில் வியாபித்தாப்போலே அநாயாஸத்தாலே அஸங்குசிதனாய்" என்று திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்தார். அவ்விடத்திலேயே தமோபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீமத் ரங்கராமாநுஜயதிகள் "[illegible]" என்றார்.

இவை யெல்லாவற்றிற்கும் சிகரமாக வேதார்த்த ஸங்க்ரஹ தாத்பர்ய தீபிகையில்—"[illegible]" என்றுள்ள ஸ்ரீஸூக்திகள் முக்கியமாக நோக்கத்தக்கன. இந்த ஸ்ரீஸூக்தியில் "[illegible]" என்னமல், [illegible] என்கிற ஶங்கைக்கே நிராஸம் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டிருப்பதால் எம்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்தில் குசோத்யங்கள் செய்கிற இக்காலத்தவர்கள் முற்காலத்திலு மிருந்தார்களென்பதும், அப்போதே இவர்கள் கண்டிக்கப்பட்டார்களென்பதும் தெளிவாகின்றது. இங்கு இவ்வளவோடு நிற்போமிப்போது.

கூனல் சங்கத் தடக்கையவனை = முன்னிரண்டடிகளிற் சொல்லியபடி எங்கும் வியாபித்து நிற்கிறவன் அடியவர்களைக் காத்தற்பொருட்டு மநுஷ்ய ஸஜாதீயனாய் வந்து அவதரிக்கும்படி சொல்லுகிறது. இங்குச் சங்கைச்சொன்னது சக்கரத்திற்கும் உபலக்ஷணம். கண்ணனாய்த் திருவவதரிக்கும்போது திருவாழி திருச்சங்கோடே வந்து பிறந்தமை அறியத்தக்கது. "ஜாதோஸி தேவதேவேஶ! ஶங்கசக்ர கதாதர!*" என்ற வஸுதேவர் வார்த்தையும் காண்க.

குடமாடியை யென்று குடக்கூத்தைச் சொன்னது க்ருஷ்ணாவதார சேஷ்டிதங்களுக்கெல்லாம் உபலக்ஷணம். இங்ஙனே க்ருஷ்ணாவதாரத்தைத் தெரிவித்தது மற்றுமுள்ள விபவாவதாரங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.

வானக்கோனை—ஓர் ஊரளவன்றியிலே ஒரு நாட்டுக்காகக் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கிறபடி. பரவ்யூஹ விபவாந்தர்யாம் யர்ச்சவதாரமென்கிற ஐந்தனுள் மூன்று இப்பாட்டில் சொல்லப்பட்டன; திருவாய்மொழி அர்ச்சாவதார வேதமாதலால் அர்ச்சாவதாரத்தை விசேஷித்து எடுக்கவேண்டா. வியூஹத்தைப்பற்றிச் சொல்லவேண்டுவது அதிகமில்லை யென்று திருவுள்ளம்.

"எம்பெருமான் றன்னைக் கவிசொல்லவல்ல என்னோடொக்குமோ ஸர்வேச்வரனான எம்பெருமான் தானும்" என்பது ஆறாயிரப்படியருளிச் செயல்.

உண்டுமுமிழ்ந்தும்கடந்துமிடந்தும் கிடந்துநின்றும் *
கொண்டகோலத்தொடுவீற்றிருந்தும் மணங்கூடியும் *
கண்டவாற்றால் தனதேயுலகெனநின்றான் தன்னை *
வண்டமிழ்நூற்கநோற்றேன் அடியார்க்கின்பமாரியே. (க0)

உண்டும்	(ப்ரளயத்திலே) உண்டு வயிற்றிலே வைத்தும்.	மணம் கூடியும்	பதினோராயிரம் ஆண்டு பூமியை ரக்ஷிக்கையாலே பூமிப்பிராட்டிவிரும்பி யணைக்க அவளோடே ஸம்ச்லேஷித்தும்
உமிழ்ந்தும்	பிறகு வெளிநாடுகாண உமிழ்ந்தும்	கண்ட ஆற்றால்	இப்படி ப்ரத்யக்ஷமாகக் கண்ட சேஷ்டிதங்களால்
கடந்தும்	[மற்றொருகால்] அளந்து காற்கீழேயிட்டும்	உலகு தனதே என	உலகம் தனக்கேஶேஷம் என்று நாடாகச்சொல்லும்படி
இடந்தும்	[அவாந்தர ப்ரளயத்திலே வராஹ ரூபியாய்] இடந்தெடுத்தும்	நின்றான் தன்னை	நின்ற ஸர்வேச்வரன் விஷயத்தில்
கிடந்தும்	[ஸ்ரீராமாவதாரத்திலே] கடற்கரையிலேகிடந்தும்	வண் தமிழ்	அழகிய தமிழ்ப்பிரபந்தத்தை
நின்றும்	இராவணவதத்தின் பிறகு தேவர்கட்குக் காட்சிகொடுத்துநின்றும்	நூற்க	தொடுக்கைக்கு
கொண்ட கோலத்தொடு	மீண்டுவந்து பட்டாபிஷேகம் பண்ணின கோலத்தொடே	நோற்றேன்	புண்ணியம் பண்ணினேன்;[இத்திவ்யப்ரபந்தமானது]
வீற்றிருந்தும்	எழுந்தருளி யிருந்தும்	அடியார்க்கு	எம்பெருமானடியார்கட்கு
		இன்பம் மாரி	ஆனந்த மழைபொழியும் மேகமாயிரா நின்றது.

* * * [உண்டுமுமிழ்ந்தும்.] நாம் பாடுகிற கவிகளின் இனிமையைத் தாம் அநுஸந்தித்து, எம்பெருமானுக்கு நல்லராயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவற்றைக் கேட்டால் எங்ஙனே இனியராகிறார்களோ வென்கிறார். எம்பெருமானுடைய சேஷ்டிதங்களடங்க என் சொல்லுக்குள்ளேயாம்படி கவிபாட வல்லேனுய் ப்ராப்த விஷயத்திலே வாசிகமாக அடிமை செய்யப்பெற்றது மாத்திரமன்றிக்கே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆனந்த மளிக்கவல்லவனுமனே னென்கிறார்.

எம்பெருமானுடைய சேஷ்டிதங்கள் பலவற்றையும் முன்னடிகளில் கங்காப்ரவாஹம்போல் அருளிச்செய்கிறார். உண்டது ப்ரளயாபத்தில்; உமிழ்ந்தது ப்ரளயம் நீங்கினவாறே கடந்தது வாமநாவதாரத்தில். இடந்தது வராஹாவதாரத்தில்.

கிடந்தது கடற்கரையிலே; ஸேதுபந்தனத்திற்கு முன்னே ஸமுத்ரராஜனை நோக்கி அஞ்ஜலிபண்ணிக்கிடந்தகிடை. நின்றது-ராவண ஸம்ஹாரம் ஆன பிறகு தேவர்களுக்குக்காட்சி கொடுத்து நின்றது. கொண்டகோலத்தொடு வீற்றிருந்தது-ஜடா வல்கலதாரியாய்ப் பர்ணசாலைகளிலே இருந்த இருப்பாதல்; மகுடாபிஷேகஞ் செய்து கொண்டு பதினோராயிரமாண்டு இருந்த இருப்பாதல். [illegible] (தச வர்ஷஸஹஸ்ராணி தச வர்ஷசதாநி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா.) * என்கிறபடியே பதினோராயிரமாண்டு பூமியை ரக்ஷிக்கையாலே பூமிக்கு அபிமாநிநியான பிராட்டி விரும்பியணைக்க, அவளோடே ஸம்ச்லேஷித்ததை சொல்லுகிறது மணங்கூடியும் என்று.

கண்டவாற்றால் என்றது-இப்படி ப்ரத்யக்ஷவிஷயமான சேஷ்டித ப்ரகாரங்களாலே என்றபடி. ஒருவன் ஒரு நிலத்தைத் திருத்துவது செடிகொடிகள் வைப்பது எருவிடுவதாய் நெடுங்காலம் க்ருஷிபண்ணக்கண்டால் 'இந்த நிலம் இவனுடையது' என்று அறியலாமன்றே; அதுபோல, உண்கை உமிழ்கை முதலான பலபல சேஷ்டிதங்களினால் 'உலக மெல்லாம் எம்பெருமானுடையது' என்று அறுதியிடக் குறையில்லையாயிற்று.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாகத் திருவாய்மொழி பாடுகைக்குப் பாக்கியம் பண்ணினேன்; இத்திருவாய்மொழியானது தொண்டர்கட்கு ஆனந்தத்தைப் பொழியும் மேகமாகவுள்ளது என்கிறது ஈற்றடி.

ஆசார்யஹ்ருதயத்தில் "வீட்டின்ப இன்பப்பாக்களில் த்ரவ்யபாஷா நிரூபணஸமம் இன்பமாரியிலாராய்ச்சி" என்றவிடத்து இன்பமாரி என்பதற்கு "திருவாய்மொழி முகத்தாலே ஆனந்தத்தை வர்ஷிக்கும் மேகமான ஆழ்வார்" என்று வியாக்கியானம் காண்கையாலே இங்கு "அடியார்க்கு இன்பமாரியாகிய நான் வண்டமிழ் நூற்கநோற்றேன்" என்று உரைத்தலுமாம். (க0)

மாரிமாறாததண்ணம்மலை வேங்கடத்தண்ணலை *
வாரிமாறாதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர் *
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால் *
வேரிமாறாதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே. (கக)

மாரி மாறாத	மழைதப்பாதபடியினாலே	காரி மாறன் சடகோபன்	ஆழ்வார்
தண்	குளிர்ந்து	சொல்	அருளிச்செய்த
அம்	அழகிய	ஆயிரத்து	ஆயிரத்தில்
வேங்கடம் மலை	திருவேங்கடமலையிலேயுள்ள	இப்பத்தால்	இப்பத்துப் பாசுரங்களினால்,
அண்ணலை	ஸ்வாமி விஷயமாக,	வேரி மாறாத	பரிமளம் அறாத
வாரி மாறாத	ஜலஸம்ருத்தி குறையாத	பூ மேல் இருப்பாள்	தாமரைமலரிலே நித்ய வாஸம் பண்ணுகிற பிராட்டி
பை பூ பொழில் சூழ்	பரந்தபூஞ்சோலைகளாலே சூழப்பட்ட	வினை தீர்க்கும்	எல்லாப்பாபங்களையும் போக்கியருள்வள்.
குருகூர் நகர்	திருநகரியில்(அவதரித்த)		

* * * [மாரி மாறாத.] இத்திருவாய்மொழி கற்பாருடைய தீவினைகளையெல்லாம் பெரியபிராட்டியார் தீர்த்தருளக்கூடுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். மழை ஒருநாளும் மாறாதபடியாலே குளிர்ந்து அழகியதான திருவேங்கடமலையிலே, தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காக வந்து நிற்கிற சீலம் பொருந்திய எம்பெருமான் விஷயமாகப்பணித்ததாம் இப்பதிகம்; ஒரு பாசுரத்திலும் திருவேங்கடமுடையானுடைய ப்ரஸ்தாவமே இல்லையாயிருக்க இங்ஙனே சொல்லுவானேன்? என்னில்; தர்மியின் ஐக்கியத்தைக் காட்டினபடி. திருவாய்மொழிக்கு அர்ச்சாவதாரத்திலேயே முழுநோக்கு என்று காட்டினபடியுமாம். இப்பதிகத்தில் "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனை" என்று பெரிய பிராட்டியார்க்கு முன்பே நித்யஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுக்கும் சீலத்தைச் சொல்லிற்றுகையாலே சீலத்துக்கு எல்லையான திருவேங்கடமுடையானைக் கவி பாடினபடியாயிற்றென்ப.

"வேரிமாறாதபூமேலிருப்பாள்வினைதீர்க்கும்" என்கையாலே பிராட்டிக்கும் எம்பெருமானுக்குப் போலவே பலனளிக்குந்திறன் உண்டென்று சிலர் சொல்லுவர்கள். நம்மை எம்பெருமான் அங்கீரிப்பதற்கு இடையூறாக இருக்கும் தீவினைகளைப் புருஷகாரக்ருத்யத்தாலே பிராட்டி போக்குவாள் என்றதித்தனை. சதுச் ச்லோகீபாஷ்யத்திலே ஸ்ரீமந்நிகமாந்ததேசிகன் "[illegible] — அஸ்தி கர்மார்ஹபலதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரிய:, நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே." என்று ஒரு காரிகை அருளிச்செய்துள்ளார். இஃதொன்று போதும் அவ்வாசிரியருடைய

ஸித்தாந்தத்தை நன்கு தெளிய. இக்காரிகையின் பொருளில் யாரும் விவாதப்பட இடமில்லை. இதிற்சொல்லுவதாவது — கர்மாநுகுணமாய்ப் பலன் கொடுப்பதில் எம்பெருமானுக்கே அதிகாரமுள்ளது. அவன் ஹிதைஷியான பிதாவாகையாலே சிலஸமயங்களில் நிக்ரஹிப்பது முண்டு; சில ஸமயங்களில் அநுக்ரஹிப்பது முண்டு, அப்படிப்பட்ட ஸமயங்களில் பிராட்டி என்ன செய்கிறுளென்னில், அவன் அநுக்ரஹத்தில் அபிமுகனுயிருக்கும்போது இவள் அதை மேன்மேலும் வளரச்செய்வதில் ஊக்கங்கொள்ளுகிறுள்; நிக்ரஹத்தில் அபிமுகனுயிருக்கும்போது அதைத்தளிப்பதிலே ஊக்கங்கொள்ளுகிறுள். இவ்விரண்டு செயல்களே பிராட்டியினுடையவை—என்பதே மேற்குறித்த காரிகையின் பொருள். ‘இதுவன்றுபொருள்’ என்று யாரும் இயம்ப இயலாது. இதுதான் தேசிகஸித்தாந்தம்; இதுவே தான் லோகதேசிக ஸித்தாந்தமும்: இதற்குமாருக நவீநர்கள் பேசும் பேச்சுக்களிலே செவிகொடுக்க வேண்டாவாயிற்று. (கக)

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஆபந்நாநந்யபந்தௌ ஸரஸிஜநிலயாவல்லபே ஸாந்த்ரமோதே
பக்தாகத்வம்ஸசீலே ததுசிதஸமயாச்வாஸதாநப்ரவீணே।
கர்ப்பூராலேபசோபே ஸமதிகரஹிதே தோஷகே ஸர்வபூர்ணே
க்ருஷ்ணே ஸ்துத்யாதிபாஜாம் [illegible] நிந்திதாநாம்॥

1. ஆபந்ந அநந்யபந்தௌ. * ஆற்றல் மிக்காளுமம்மானை வெம்மா பிளந்தான் தன்னை * அடியவர்களுக்காகக் கண்ணனுய்த் திருவவதரித்தருளி விரோதி நிரஸநம்பண்ணிக்கொடுத்து ஆபத் பந்துவாயிருக்குமவன்.

2. ஸரஸிஜநிலயாவல்லபே. * மையகண்ணுள் மலர்மேலுறைவாளுறை மார்பினன் * பெரிய பிராட்டியார்க்கு ப்ராணநாதன்.

3. ஸாந்த்ரமோதே. * வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்த நம்மச்சுதன் * திணுங்கின ஆனந்தத்தையுடையவன்.

4. பக்தாகத்வம்ஸசீலே. * மேவி நின்று தொழுவார்வினைபோக மேவும் பிரான் * அடியார்களுடைய தீவினைகளைத் தொலைத்தருள்பவன்.

5. ததுசிதஸமயாச்வாஸதாநப்ரவீணே. * ஆற்ற நல்லவகை காட்டு மம்மானை * ஸமயமறிந்து (நிலைமைக்குத்தக்கவாறு) ஸாத்மிக்க ஸாத்மிக்க அவர்களை அநுபவிப்பிக்குமவன்.

6. கர்ப்பூராலேப சோபே. *கரியமேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்* சாமளமான திருமேனியிலே: பச்சைக் கருப்பூரமணிந்து அதனுலே மிக்க சோபை பெற்றவன்.

7. ஸமதிகரஹிதே. * ஒன்று மொன்றுகி பொத்தாரும் மிக்கார்களும் தன்றனக்கின்றி நின்றுனை * தனக்கு மேற்பட்டவர்களில்லாதவன்.

8. தோஷகே. * நமக்கும் பூவின்மிசை நங்கைக்குமின்பனை * இன்றுக அடி பணிந்தவர்களையும் பிராட்டிக்குமேற்பட நினைத்து ஆநந்திப்பிக்குமவன்.

9. ஸர்வபூர்ணே. * வானத்தும் வானத்துள்ளும்பருமித்யாதி. * எப்போதும் எல்லாவிடங்களிலும் எல்லாப்பொருள்களிலும் வியாபித்து நிற்குமவன்.

10. ஸர்வபூர்ணே. * என்பதையே மீண்டும் ஆவ்ருத்தி பண்ணிக்கொள்ளவேணும்; “ஸர்வஸ்மிந் பூர்ணே” என்கிற வ்யுத்பத்திபோலவே “ஸர்வை: பூர்ணே” என்கிற வ்யுத்பத்தியும் ஸமுசிதமாகையாலே, ‘ஸகலவித சேஷ்டிதங்களினுலும் பரிபூர்ணன்’ என்று பொருள்கொண்டு “உண்டுமுமிழ்ந்தும் கடந்துமிடந்தும் கிடந்து நின்றும், கொண்டகோலத்தொடு வீற்றிருந்து மணங்கூடியும்” என்று பத்தாவது பாசுரத்திற் சொன்ன சேஷ்டித பூர்த்தியையுங் காட்டுவதாகக்கொள்க. ஆக இப்படிப்பட்ட எம்பெருமானிடத்திலே ஸ்துதி முதலானவற்றைச் செய்பவர்களுடைய பாக்யசாலித்வத்தையும் மற்றையோர் பாக்யஹீநரென்னுமத்தையும் ஆழ்வார் * வீற்றிருந்தேழுலகில் அருளிச்செய்தாரென்றதாயிற்று.

ஸ்துத்யாதிபாஜாம் என்று ஷஷ்டீ பஹுவசனமாக வன்றிக்கே “ஸ்துத்யாதிபாகீ” என்று ப்ரதமைகவசநமானபாடம் இருப்பதாகவும், இது ஆழ்வார்க்கு விசேஷணமென்றும் பெரியோர் பணிப்பர். இது மிகவும் பொருத்தமானபாடம். இத்திருவாய்மொழியில் ஸ்துத்யாதிஸாமக்ரீ பாசுரந்தோறும் ஆழ்வார்க்கே விளங்கா நின்றதாதலால்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ராமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கருத்து.) கீழ்த்திருவாய்மொழியில் உண்டான வியாமோஹம் தீர எம்பெருமான் வந்து தோன்ற, ஆனந்த பரிபூர்ணனும் குறையற்ற விபூதியோடு கூடினவனுமான ஸ்ரீவைகுண்டநாதனை ஆழ்வார் ஸேவித்து வாயாரவாழ்த்தி, இப்படித் திருவாய்மொழி பாடும் பாக்யம் பெற்ற வெனக்கு எவ்விபூதியிலும் யாரும் நிகரில்லையென்றும் எனக்கினி யாதொரு குறையுமில்லையென்றும் சொல்லித் தமது ஆனந்த வெள்ளத்தை ஐந்தாந் திருவாய்மொழியில் வெளியிட்டருளினரென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—நூற்றந்தாதி

விற்றிருக்கு மால்விண்ணில் மிக்க மயல்தன்னை
ஆற்றுதற்காத் தன்பெருமை யானதெல்லாம்—தோற்றவந்து
நன்று கலக்கப்போற்றி நன்குகந்து வீறுரைத்தான்
சென்றதுயர் மாறன் தீர்ந்து.

விண்ணில்	பரமபதத்தில்	நன்று கலக்க	தம்மோடொன்றாகக்கலக்க அவனை
வீற்றிருக்கும்	எழுந்தருளியிருக்கின்ற	மாறன்	ஆழ்வார்
மால்	எம்பெருமான்	போற்றி	வாயாரவாழ்த்தி
மிக்க மயல் தன்னை	கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குண்டான மிகுந்த வியாமோஹத்தை	நன்கு உகந்து	மிகவும் களிப்படைந்து
ஆற்றுதற்கு ஆ	தணிவிக்கைக்காக	சென்ற துயர் தீர்ந்து	நிகழ்ந்த துக்கங்கள் ஒழியப்பெற்று
தன் பெருமை ஆனதுஎல்லாம் தோற்ற வந்து	தன் குணவிக்ரஹாதி வைபவங்களெல்லாம் ப்ரகாசிக்குமாறு இங்கே வந்து	வீறு உரைத்தான்	உபய விபூதியிலும் தாம் வாசிபெற்றவரான பெருமையையருளிச் செய்தார்.

* * * கீழே * மண்ணையிருந்து துழாவியில் அளவுகடந்த வியாமோஹத்தையடைந்த ஆழ்வாருடைய அந்த வியாமோஹத்தைத் தணியச் செய்யும் பொருட்டுப் பரமபதநிலயனை எம்பெருமான் திருப்புளியாழ்வாரடியிலே யெழுந்தருளித் தன்னுடைய அஸாதாரணாகாரத்தைக் காட்டிக்கொடுத்து ஸம்ஶ்லேஷிக்க, அதனால் ஆழ்வார் உள்ளங்குளிர்ந்து வாயாரவாழ்த்தித்துயர் தீரப்பெற்று, உபயவிபூதியிலும் தமக்கு நிகரில்லாமையாகிற தமது பெருமேன்மையை இத்திருவாய்மொழியில் அருளிச்செய்தா ரென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சென்னை-600 008.
154932

திருவாய்மொழி நான்காம்பத்து.

ஆறாந் திருவாய்மொழி—தீர்ப்பாரையாமினி.

உரையவதாரிகை :—கீழில் சென்ற திருவாய்மொழிக்கு அடுத்தபடியாக இந்தத் திருவாய்மொழி இருக்கத்தகுதியில்லை யென்று நம்முதலிகள் கூறுவர்களாம். கீழ்த்திருவாய்மொழி எல்லை கடந்தப்ரீதியோடே சென்றது ; அதற்கு எதிர்த்தட்டாய்ச் செல்கிறது இத்திருவாய்மொழி.

கீழ்ப்பதிகத்திற்கும் இப்பதிகத்திற்கும் ஸங்கதி அருளிச்செய்யவேணுமென்று எம்பாரைச் சிலர் கேட்டார்களாம் ; அதற்கு எம்பார் "இதற்கு நான் என்னசொல்லுவேன் ? அஸங்கதி ரேவ ஸங்கதி: என்று கொள்ளுங்கோள்" என்றாராம். இது இன்சுவையே வடிவெடுத்த வார்த்தையாகும். ஸங்கதி சொல்ல முடியாதென்று ஆபாத ப்ரதீதியிலே பொருளாம் ; அஸங்கதி: என்றது அஸம்ஶ்லேஷமென்றபடியாய் விச்லேஷத்தைச் சொல்லிற்றாய், விச்லேஷந்தான் இதற்கு ஸங்கதி என்கை பரமார்த்தம்.

* மண்ணையிருந்து துழாவியில் ஆழ்வார்க்கு உண்டான வியாமோஹத்தைத் தணிப்பதற்காக வந்து கிட்டின வைகுந்தநாதன் மறைய நிற்க, அந்தப்பிரிவை ஆற்றமாட்டாமல் இத்திருவாய்மொழி விஷாதத்திலேயாய்ச் செல்லுகின்றது. வெறிவிலக்குத் துறையிலே அவதரித்ததாம் இத்திருவாய்மொழி. ஆழ்வார் தாமான தன்மையையிழந்து ஒரு தலைமகளாம் நிலைமையை எய்தி, அதுதன்னிலும் தம்வாயாலே சொல்லமாட்டாமல் வேற்றுவாயாலே சொல்லவேண்டித் தோழியின் பேச்சாகச் செல்லுகின்றது.

பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளது வடிவுவேறுபாட்டினைக் கண்ட தாய்மார் 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்த தொழியப் பறிதொன்றுமில்லை' என்று கூற, அதுகேட்ட தாயர் உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக் கொண்டு ஆவேசமாடுவிப்பதும் க்ஷுத்ரதெய்வங்களுக்கு உரிய ஸந்தர்ப்பனை

022 211, N26
N38.12.12

களை யிடுவிப்பதும் செய்ய, அதற்குத் தலைமகள் மிகவருந்தாநிற்க அச்சமயத்தில் அவளது துன்பத்தின் உண்மையான காரணமுணர்ந்த தோழி அந்தப்ரவ்ருத்திகளைக் கண்டித்துக் கூறுகிற பாசுரமாய்ச் செல்லுகிறது.

ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சியென்றும் தேவதாந்தரக் கட்டுவிச்சியென்றும் கட்டுவிச்சிகளிலே இரண்டு பேதமுண்டு; திருமங்கையாழ்வாருடைய சிறிய திருமடலிலே வந்தவள் ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சி; இத்திருவாய்மொழியில் "இது காண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சி சொற்கொண்டு, நீர் எதுவானுஞ் செய்து அங்கோர் கள்ளுமிறைச்சியுந் தூவேல்மின்" என்கிறபாசுரப்பட்டிக்கு வந்தவளான கட்டுவிச்சி தேவதாந்தரக் கட்டுவிச்சியாவள்.

"கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டியே திரிவேனை யாரிங்கழைத்ததூஉ!"

"விண்ணகரம் வெஃகாவிரிதிரைநீர் வேங்கடம் மண்ணகரம் மாமாடவேளுக்கை
யெங்குந்திரிந்து இன்றே மீள்வேனையாரிங்கழைத்ததூஉ";

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவுமஃகாத பூங்கிடங்கின் நீள்கோவல்
பொன்னகருமெங்குந்திரிந்து இன்றே மீள்வேனை யாரிங்கழைத்ததூஉ;"

"கொங்குங்குடந்தையுங் கோட்டியூரும் பேரும்
எங்குந்திரிந்து இன்றே மீள்வேனையாரிங்கழைத்ததூஉ."

என்று கர்ணாம்ருதமாகப்பாடிக்கொண்டே வீதியாரவருவள் ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சி;

"பிணங்களடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனார்
குணங்களையே நிச்சலும் கூறித் திரிவேனையாரிங்கழைத்ததூஉ!"

"வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யில் பூசிக் கையகத்தோர்
சந்தார் தலை கொண்டுலகேழுந்திரியும் பெரியோன் குணம்பாடி
இன்றேதிரிவேனை யாரிங்கழைத்ததூஉ!"

"சுடலையில் சுடு நீறனமர்ந்ததோர் நடலைபப்பாடி நாடெங்குந்
திரிவேனை யாரிங்கழைத்ததூஉ!"

"அக்கும் புலியினதளு முடையாரவரொருவர் பக்கமே சென்று பாரெல்
லாம் திரிவேனையாரிங்கழைத்ததூஉ!"

"ஆறும் பிறையுமரவுமுமடம்புஞ்சடை மேலணிந்துடலம்
நீறும் பூசி ஏறூறுமிறையோன் துறையிற்படிவேனையாரிங்கழைத்ததூஉ"

என்று பாடிக்கொண்டே திரிவள் தேவதாந்தரக் கட்டுவிச்சி. இப்படிப்பட்ட கட்டுவிச்சியின் கட்டுரைகட்கு இணங்கிய செயல்களை விலக்குகின்றதாயிற்று இத்திருவாய்மொழி.

ஆறாயிரப்படியில் இத்திருவாய்மொழியின் அவதாரிகை ரஸமயமாகவுள்ளது; அது வருமாறு:—"ஏவம்பூதனாயிருந்த எம்பெருமானை விச்லேஷித்து அத்யந்தம் அவஸந்நையாய் மோஹதசாபந்நையாயிருந்த பிராட்டியின் திருத்தாயாரும் உறவு முறையாரும் இவளுடைய அவஸாதத்தைக் கண்டு 'இவளுக்கு இந்த அவஸாதம் எத்தாலேவந்தது?' என்றும் 'இதுக்குப் பரிஹாரமென்?' என்றும் ஒரு கட்டுவிச்சியைக் கேட்க, அவளும் 'க்ஷுத்ரதேவக்ருதம்' என்றும் 'இதுக்குப்பரிஹாரம் தத்ப்ரீணநம்' என்றுஞ்சொல்ல, அவர்களும் அது கேட்டு இவள் பக்கலுள்ள ஸ்நேஹாதிசயத்தாலே 'ஏதேனுமொருதைவத்தை ஆச்ரயித்தாகிலும் இவளைப்பெறில் இதுவே யெங்களுக்கு ஆத்மலாபம்' என்று பார்த்து அந்த க்ஷுத்ரதேவதா ப்ரீணநத்திலே ப்ரவ்ருத்தராய்ச் செல்லாநிற்க, இப்பிராட்டியினுடைய திருத்தோழியானவள் 'நீங்கள் கருதுகிறவை ஈடல்ல; பரிஹாரமுமல்ல; நோயும் நீங்கள் கருதுகிறதல்ல; இன்னது நோய்; இன்னது பரிஹாரம்' என்று சொல்லி அவர்களை நிவர்த்திப்பிக்கிறாளென்கிறது."

தேவதாந்தர ஸம்பந்தகந்தத்தையும் ஸஹியாத ஆழ்வாருடைய பரம வைஷ்ணவத்வம் சொல்லுகிறது இத்திருவாய்மொழி.

தீர்ப்பாரையாமினி எங்ஙனம்நாடுதுமன்னைமீர்! *
ஓர்ப்பாலிவ்வொண்ணுதல் உற்றநல்நோயிதுதேறினோம் *
போர்ப்பாகுதான்செய்து அன்றைவரைவெல்வித்த * மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு இவள்சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே. (க)

அன்னைமீர்	தாய்மார்களே!
இனி	இப்படிப்பட்ட நிலைமையான பின்பு
தீர்ப்பாரை	இந்தநோயைத் தீர்க்க வல்லவர்களை
யாம் எங்ஙனம் நாடுதும்	நாம்எவ்விதமாகத் தேடிப்பிடிக்க முடியும்? (முடியாது)
ஓர்ப்பால்	நன்கு நிரூபிக்குமளவில்
இ ஒள் நுதல்	அழகிய நெற்றியையுடைய இப்பெண்பிள்ளை
உற்ற இது	அடைந்திருக்கின்ற இந்த நோயானது
நல் நோய்	விலக்ஷணமான நோயாகும்;
தேறினோம்	திண்ணமாக அறிந்தோம்
அன்று	முன்பொருகாலத்திலே
போர்	பாரதப்போரிலே

பாகு	பாகனாயிருந்து செய்ய வேண்டிய காரியங்களை
தான் செய்து	தானேமுன்னின்று நடத்தி
ஐவரை	பஞ்சபாண்டவர்களை
வெல்வித்த	ஜயம்பெற்றவர்களாகச் செய்வித்த
மாயம்	ஆச்சரிய சக்தியுக்தரும்
போர் தேர் பாகனார்க்கு	யுத்தபூமியில் தேர்செலுத்தவல்லவருமான பெருமான்விஷயத்திலே
இவள்	இப்பராங்குசநாயகியினுடைய
சிந்தை	மனமானது
துழாய்	திழாவப்பெற்று
திசைக்கின்றதே	அறிவழியாநின்றதே!

* * * [தீர்ப்பாரையாமினி] பராங்குசநாயகியின் தோழியானவள், 'இந்நோய் பாண்டவபக்ஷபாதியான கண்ணபிரானடியாக வந்ததாகையாலே இதற்கு நீங்கள் பரிஹாரமாக நினைத்துச் செய்கிறவை பரிஹாரமல்ல' என்று மோக்ஷிக்கிறாள். அன்னைமீர்! யாம் இனித்தீர்ப்பாரை எங்ஙனம் நாடுதும்?—இச்சொல்தொடர் பலவகைக் கருத்துக்களைக் கொண்டது; இவ்வாழ்வாருடைய அருகிலே வருமவர்களெல்லாம் இவரோடொப்ப மோஹிப்பவர்களேயன்றி, உணர்ந்திருந்து பரிஹாரமுறைமைகளை ஆராயவல்லார் ஒருவருமில்லையே! என்கை. நோய்க்குப் பரிஹாரம் பண்ணிக்கொண்டிருக்குமவர்களை நோக்கித் "தீர்ப்பாரையாமினி யெங்ஙனம் நாடுதும்" என்கையாலே நீங்கள் செய்கிறவை பரிஹாரமல்ல என்ற வாறுமாம்.

"கடல் வண்ணரிது செய்தார் காப்பாராரே?" என்கிறபடியே * நோய்களறுக்கும் மருந்தான எம்பெருமான்தானே இங்ஙனே நோய் செய்தானான பின்பு இனி இந்நோயைத் தீர்க்கவழியுண்டோ? என்றபடியுமாம்.

ஓர்ப்பால்— இப்போது ஆராய்ந்து பார்த்தவிடத்தில் என்றபடி. ஓர்ப்பு— ஆராய்ச்சி.

இவ்வொண்ணுதல்—"அகத்தினழகுமுகத்திலே தெரியும்" என்பர்களே உலகர்கள்; இவளுடைய திருமுகமண்டலத்தில் தெளிவை நோக்கும்போதே இவளுடைய நோய்க்கு நிதாநம் தெரியவில்லையோ என்கை. இங்கே ஈடு;— "அம்புபட்ட வாட்டத்தோடே முடிந்தாரையும் நீரிலே புக்கு முடிந்தாரையும் முகத்திலே தெரியாதோ? குணாதிக விஷயத்தையாசைப்பட்டுப் பெறாமையாலுண்டான மோஹமாகையாலே முகத்தில் செவ்விக்கு ஆலத்தி வழிக்கவேண்டும் படியாயிற்றிருக்கிறது."

நோய் என்னாதே 'நன்னோய்' என்கையாலே, ஒவ்வொருவரும் நோன்பு நோற்றுப்பெறவேண்டிய நோயன்றோ இது; இது வளர்வதற்குவழிதேடவேண்டு மேயல்லது இதைப் பரிஹரிக்க முயல்வது முறைமையோ? என்ற கருத்து வெளியாம்.

தேறினோம்—தெளிவு பெற்றோமென்றபடி. இது தோழி சொல்லுகிற வார்த்தையாகையாலே, தான் தெளிவு பெற்றதாகச் சொல்லுகிறவிதனால் அங்குள்ளாரெல்லாரும் கலக்கமுற்றிருப்பதாக ஏற்படுகின்றது; இந்தக் கலக்கமே இவர்களுக்கு நிதியாம்; "மஹர்ஷிகளின் கோஷ்டியில் கலக்கம் காணக்கிடைக்காது; ஆழ்வார்களின் கோஷ்டியில் தெளிவுகாணக்கிடைக்காது" என்பர் நம் முதலிகள். தெளிந்திருக்க வேண்டுவதன்றோ ப்ராப்தம்; கலங்கியிருத்தல் ஹேயமன்றோ வென்று ஸாமாந்யர் நினைப்பர்கள்; "தர்பவீர்யஜ்ஞாநத்தாலே தெளிந்து த்ருஷ்டராய் மேலே மேலே தொடுப்பாரைப் போலன்றே அருளின பக்தியாலே உள்கலங்கிச்சோகித்து மூவாறுமாஸம் மோஹித்து வருந்தியேங்கித் தாழ்ந்த சொற்களாலே நூற்கிறவிவர்" என்ற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தி நோக்குக.

இத்தலைவிக்கு உண்டான நோய் இன்னவகைத்து என்பதைப் பின்னடிகள் நிரூபிப்பன. கண்ணபிரான், பாண்டவர் துர்யோதநாதிகள் என்ற இருவகுப்பினரையும் ஸந்தி செய்விக்கைக்காகத் துரியோதநாதியரிடம் தூதாகச் சென்று 'பாண்டவர்களும் நீங்களும் பகைமைகொள்ளவேண்டாம்; ராஜ்யத்தில் இருவர்க்கும் பாகமுண்டு; ஆகலால் ஸமபாகமாகப் பிரித்துக்கொண்டு ஸமாதானமாக அரசாட்சி செய்து வாழுங்கள்; அதற்கு ஸம்மதியில்லாவிடில், தலைக்கு இரண்டிரண்டு ஊராகப் பாண்டவர் ஐவர்க்கும் பத்து ஊரைக்கொடுங்கள்; அதுவும் அநிஷ்டமாகில் பாண்டவர்கள் குடியிருக்கும்படி ஓரூரையாவது கொடுங்கள்' என்று பலபடி அருளிச்செய்ய, அந்தச் சொல்லுக்குச் சிறிதும் இசையாமல் 'பராக்ரமமிருந்தால் போர் செய்து ஜயித்துக் கொள்ளட்டும்; இந்தபூமி வீரர்க்கே உரியது' என்றிப்படி திக்காரமாக மறுத்துச் சொல்லவே, தான் பாண்டவபக்ஷபாதியாய்ப் பார்த்தஸாரதியாயிருந்து பாரதயுத்தத்தை நடத்திவைத்து எதிரிகளைத் தோற்பித்து அடியவர்களை வெற்றிபெறுவித்தருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது.

இவள் சிந்தை துழாய் திசைக்கின்றது மாயப்போர்த் தேர்ப்பாகனார்க்கு— கண்ணபிரானுடைய ஆச்ரிதபக்ஷபாதம், ஆச்ரிதவாத்ஸல்யம் முதலிய திருக்குணங்களில் ஈடுபட்டதனாலுண்டான நோய்காண்மின் இது என்று தெரிவித்தாளாயிற்று. துழாய்—துழாவி; ப்ரமித்து என்றபடி. (க)

திசைக்கின்றதேயிவள்நோய் இதுமிக்கபெருந்தெய்வம் *
இசைப்பின்றிநீரணங்காடும் இளந்தெய்வமன்றிது *
திசைப்பின்றியே சங்குசக்கரமென்றிவள்கேட்க * நீர்
இசைக்கிற்றிராகில் நன்றேயில்பெறுமிதுகாண்மினே. (௨)

(அன்னைமீர்)	தாய்மார்களே!,	திசைப்பு இன்றியே	மனக்குழப்பம் தவிர்ந்து
திசைக்கின்றதே	நீங்கள் இப்படியும்அறிவு கெடலாகுமோ?	நீர்	நீங்கள்
இவள் நோய் இது	இப்பெண்பிள்ளைக்கு உண்டாகியிருக்கின்ற நோயானது	இவள் கேட்க	இப்பெண்பிள்ளையின் காதில் விழும்படியாக
மிக்க பெரு தெய்வம்	பராத்பரமான தெய்வமடியாகவந்தது;	சங்கு சக்கரம் என்று	சங்கென்றும் சக்கரமென்றும்
இசைப்பு இன்றி	தகுதியில்லாதபடி	இசைக்கிற்றிர் ஆகில்	சொல்ல வல்லீர்களானால்
நீர்	நீங்கள்	நன்றே	நலமாகவே
அணங்கு ஆடும்	வெறியாடுவிக்கின்ற	இல் பெறும்	(இவள்) இல்லிருப்புப் பெறும்படியாகும்;
இள தெய்வம் அன்று இது	க்ஷுத்ரதெய்வமடியாக வந்ததன்று இது; (ஆதலால்)	இது காண்மின்	இங்ஙனே நடத்திப் பாருங்கள்.

* * * [திசைக்கின்றதே.] க்ஷுத்ர தெய்வங்களைக் குறித்துப்பண்ணும் சாந்திகளால் இவளுடைய நோய் போக்கவரிது; எம்பெருமானுடைய லக்ஷணங்களைச்

சொல்லில் இவளைப்பெறலாமென்கிறாள். திசைக்கின்றதே என்பது மிக வருந்திச் சொல்வதாகும். இப்படியும் ப்ரமிக்கலாகுமோ? என்று க்ஷேபிக்கிறபடி.

இவள் நோயிது மிக்கபெருந்தெய்வம்=திருவிருத்தத்தில் "வானோர் தலைமகனும் சீராயின தெய்வநன்னோய் இது" என்றும் "சின்மொழிநோயோ கழிபெருந்தெய்வம்" என்றும் உள்ள பாசுரங்கள் இங்கே அநுஸந்திக்கத்தக்கன. "நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:" என்கிறபடியே பரதெய்வ ஸ்ரீமந்நாராயணனாலே உண்டுபண்ணப்பட்ட நோய் இது என்றபடி.

நீரிசைப்பின்றி அணங்காடும் இளந்தெய்வமன்று இது—இசைப்பு—பொருத்தம்; அஃதில்லாமல் நீங்கள் செய்கிறதுப்போருகிற வெறியாட்டல்முதலான தீயசெயல்களுக்கு இலக்கான தெய்வபடியாக வந்த நோயல்ல இது என்றபடி. இசைப்பின்றி யென்பதற்கு ஈடு;— "நீங்கள் பண்ணுகிற பரிஹாரத்துக்கும் உங்களுக்கும் ஒரு சேர்த்தியில்லை; இந்நோய்க்கும் இவளுக்கும் ஒரு சேர்த்தியில்லை; முதல்தன்னிலே பகவத்விஷயத்திலே கைவைத்தார் கொள்ளுகைக்கு ஸம்பாவனையுடைய நோவன்று இதுதான். ஒரு வழியாலும் ஒரு சேர்த்தியில்லை."

அணங்காடுதல்—தெய்வமாவேசித்து ஆடுதல். இனிச்செய்யவேண்டிய ஸமஞ்ஜஸமான பரிஹாரப்ரகாரமுணர்த்துவன பின்னடிகள். திசைப்பின்றியே—மருள்கொள்ளாமல். எம்பெருமானுடைய திவ்யாயுதங்களை இவள் செவிப்படுமாறு ப்ரஸ்தாவிப்பதே நன்று என்கை.

இவ்விடத்திலே ஒரு ஐதிஹ்யம்; பட்டர்காலத்தில் ஆய்ச்சிமகன் என்றொரு பாகவதர்; அவர் நோவுகண்டு ப்ரஜ்ஞையற்றுக் கிடக்குங்காலத்திலே பட்டர் அவரைப்பார்க்க எழுந்தருளினாராம்; அப்போது அந்த ஆய்ச்சிமகன் அடியோடு அறிவுநடையாடாதபடி யிருப்பதைக்கண்டபட்டர் அவர் அழகிய மணவாளனிடத்தில் மிக்கபக்தியுடையவர் என்பது காரணமாக அவருடைய செவியிலே மெள்ளவூதினாப்போலே 'அழகிய மணவாளப்பெருமாளே சரணம்' என்றாராம்; அதனால் உணர்த்தியுண்டாய் நெடும்போதெல்லாம் அவர் அந்த வார்த்தையையே சொல்லிக்கொண்டிருந்து திருநாட்டுக்கு நடந்தாராம்.

நன்றே இல்பெறும், நன்று ஏயில்பெறும்—என்று இரண்டுவகையாகப் பிரிப்பர்கள்; இரண்டாவதில், நன்று—நன்றாக, ஏயில்பெறும்—வார்த்தைசொல்லப்பெறுவள் என்றவாறு. மயக்கம் நீங்கி உணர்த்தியுண்டாகுமென்கை. (உ)

இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சிசொற்கொண்டு * நீர்
எதுவானும்செய்து அங்கோர்கள்ளுமிறைச்சியும்தூவேன்மின் *
மதுவார்துழாய்முடி மாயப்பிரான்கழல்வாழ்த்தினால் *
இதுவேயிவளுற்றநோய்க்கும் அருமருந்தாகுமே. (௩)

அன்னைமீர்	தாய்மார்களே!,	மது ஆர்	தேன் பொருந்தின
இது காண்மின்	நான் சொல்லுகிற இக் காரியத்தைச் செய்து பாருங்கள்;	துழாய்	திருத்துழாய் மாலையை
		முடி	திருமுடியிலணிந்துள்ள
நீர்	நீங்கள்	மாயம் பிரான்	ஆச்சர்ய சக்தியுக்தனை ப்ரபுவினுடைய
இ கட்டுவிச்சி சொல் கொண்டு	இந்தக் குறத்தியின் பேச்சைக் கேட்டு	கழல்	திருவடிகளை நோக்கி
எதுவானும் செய்து	ஸ்வரூப விருத்தமானதைச் செய்து	வாழ்த்தினால்	மங்களாசாஸனம் பண்ணினால்
அங்கு	அவ்விடத்திலே	அதுவே	அதுதானே
ஓர் கள்ளும் இறைச்சியும்	ஹேயமான மதுவையும் மாம்ஸத்தையும்	இவள் உற்ற நோய்க்கும்	இப்பெண்பிள்ளையடைந்திருக்கிற நோய்க்கும்
தூவேல்மின்	ஆராதனையாக வைக்க வேண்டா;	அரு மருந்து ஆகும்	அருமையான மருந்தாகும்.

* * * [இதுகாண்மின்] தவறுதலான செயல்களைச் செய்யாமல் எம்பெருமான் திருவடிகளை வாழ்த்துவதாகிற பரிஹாரமுறைமையை யனுட்டித்தால் இவளுடைய நோய்தீருமென்கிறாள். நான் சொல்லுகிற வார்த்தை விரைவில் பயன் தருகின்றதா இல்லையா என்பதை நீங்கள் கைமேலே காணுங்கோளென்பாள் இதுகாண்மினன்னைமீர் என்கிறாள். காண்மின் என்றது 'கேண்மின்' என்ற பொருளில் வந்ததாகவும் கொள்ள இடமுண்டு. அன்னைமீர்! என்கையாலே நீங்கள் மிகவும் மூத்தவர்களேயானாலும், சொல்லுகிறநான் சிறுமியேயானாலும் சொல்லும்பேச்சு நல்லதாயிருக்குமாகில் ஆதரிக்கவேண்டாவோ? என்கிற கருத்துத்தொனிக்கும். "வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பிவணங்கினாளே" என்கிறபடியே என்போல்வாருடைய பேச்சுக்கு உபசாரவிசேஷங்கள் செய்யவேண்டியிருக்க, அவை செய்யாவிடினும் காது கொடுத்துக் கேட்கத்தானாகாதோ என்கிற கருத்தும் தொனிக்கும்.

கட்டுவிச்சி—குறி சொல்லுகிறவள். இகரச்சுட்டு—அவளுடைய இழிவைப் புலப்படுத்தும். "காணிலுமுருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தரமிடுக்கிலாத தேவர்" என்கிறபடியே மிகவும் நீசமான தெய்வத்தை வழிபடுகின்ற இவளை எங்கே தேடிப்பிடித்தீர்கள்! என்று க்ஷேபிக்கிறபடி. கண்கொண்டு காணவொண்ணாதவிவளை அழைத்து எதிரேயிருத்தினதுமல்லாமல் இவளுடைய கடியகொடிய பேச்சுக்களுக்குக் காது கொடுப்பதுஞ் செய்தீர்களே! என்று இடித்துக்கூறுகிறபடி. இகரச்சுட்டு சொல்லில் அந்வயிக்கவுமாம்; கட்டுவிச்சியின் இச்சொல் என்க.

நீர்—உங்களுடைய வைலக்ஷண்யத்தை நீங்கள் அறியீர்களோ? *மறந்தும் புறந்தொழாத குடியிலே பிறந்துவைத்து நீங்கள் இங்ஙனே செய்யத்தகுமோ? என்பது கருத்து. இவர்கள் செய்கிற காரியம் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடியை எதுவானுஞ்செய்து என்பதனால் காட்டுகின்றாள். வாயால் அதனை அநுவதிக்கவுங் கூசுகிறபடி. ஹேயமான மதுவையும் மாம்ஸத்தையும்தூவி ஸ்ரீ

வைஷ்ணவக்ருஹத்தைக் கெடுக்கவேண்டாவென்கிறாள். தேவதாந்தரக்கட்டு விச்சியின் பேச்சைக்கேட்டு தேவதாந்தர ஸமாராதனம் பண்ணுகிறார்களாகை யாலே "கள்ளுமிறைச்சியும் தூவேல்மின்" என்கிறாள். தாமஸ தெய்வங்களுக்குத் தாமஸ பதார்த்தங்களை உகந்தஉணவாதலால் "கொல்வனமுதலா அல்லனமுயலு மினையசெய்கை" (திருவாசிரியம்) என்கிறபடியே ஆடுபலி கொடுத்தல் கோழிபலி கொடுத்தல் முதலிய தீயசெயல்களைச் செய்கிறார்களாகக் கொண்டு நிவர்த்திப்பிக் கிறபடி.

ஆழ்வாருடைய பரிஸரத்திலே கள்ளும் இறைச்சியும் தூவ ப்ரஸக்தி லேசமுமில்லையே; இங்ஙனே அப்ரஸக்த ப்ரதிஷேதம் பண்ணலாமோவென்னில்; கேண்மின்; திருவாய்மொழி பக்திசாஸ்த்ரமாயிருப்பதுபோலவே தர்மசாஸ்த்ரமு மாயிருக்கும். ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களைத் தெரிவிக்கின்றவைத்தனையிலேநோக்கு; ஆஹாரநியமப்ரகரணத்திலே இவை பரிஹரணீயங்கள் என்னுமிடத்தை வற் புறுத்துகிறபடி.

இனி, ஸ்வரூபாநுரூபமான பரிஹாரக்ரமத்தைச் சொல்லுகிறன பின்னடி கள். * தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மானது திருவடிகளை ஸ்மரித்து "உன்சேவடி செவ்வி திருக்காப்பு" என்று பல்லாண்டு பாடுமளவேபோதும் என்கிறாள். (ரு)

மருந்தாகுமென்று அங்கோர்மாயவலவைசொற்கொண்டு * நீர்
கருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறும் களனிழைத்தென்பயன் *
ஒருங்காகவேயுலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட *
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கில் இவளைப்பெறுதிரே. (சு)

(அன்னைமீர் !)	தாய்மார்களே !
மருந்து ஆகும் என்று	நோய்க்குப் பரிஹாரமாகுமென்றெண்ணி
ஓர் மாயம் அலவை சொல் கொண்டு	வஞ்சகச் செய்கைகளையுடையளாயும் தோன்றினபடியே சொல்லுபவளாயுமிருக்கின்ற ஒருத்தியின் பேச்சைக் கொண்டு
நீர்	நீங்கள்
கரு சோறும்	கருஞ்சோற்றையும்
மற்றை செம் சோறும்	மற்றுள்ள செஞ்சோற்றையும்
களன்	நாற்சந்தியிலே
இழைத்து	இடுவதனால்

என் பயன்	என்ன பலனுண்டாம்? (இது வீணான காரியம்;)
உலகு ஏழும்	ஸப்தலோகங்களையும்
ஒருங்கு ஆக ஏ	ஒருகாலே
விழுங்கி	(ப்ரளயம் கொள்ளாதபடி) உட்கொண்டு
உமிழ்ந்திட்ட	பிறகு வெளிப்படுத்தின
பெரு தேவன்	பரதேவதையான ஸ்ரீமந் நாராயணனுடைய
பேர்	திருநாமங்களை
சொல்ல கிற்கில்	(இவளது காதிலே படும்படி) சொல்லவல்லீர்களானால்
இவளை பெறுதிர்.	இவளை இழவாமே பெறுவீர்கள்.

ஸங்க்ருஹீதம்.

213. அடி தொழுதெழென்றவிதிலே வஸ்துநிர்த்தேச, நமஸ்கார, ஆசீஸ்ஸுக் களுமுண்டு.

214. சாதுசனம் நண்ணு மயர்வற மாசறுக்கும் தெருள்கொள்ளப் பத்தராவர்

---

9. * நலமருளினன் * என்று பக்தியைத்தந்தபடி சொல்லுகையாலே தாப்பாசுரமாகவும் தோழிபாசுரமாகவும் தலைவிபாசுரமாகவும் இங்ஙனே அந்யாப தேசமுறையிலே பாசுரங்கள் அவதரிப்பதற்கு ஹேது பக்திதான் என்று காட்டுகை யாலே அந்யாபதேசஹேது ஸங்க்ருஹீதமாயிற்று, ஆதிசப்தத்தாலே—மற்றும் வேதாந்ததாத்பர்யங்களான அர்த்தங்கள் பலவும் இவற்றிலே ஊஹித்தறியவேண் டியவை என்று காட்டப்பட்டது.

[மங்களாசரணமும் உண்டென்று காட்டுதல்.]

213. நூல்கள் இடையூறின்றித் தலைக்கட்டுதற்காகவும், மிக்கதாமதமின்றி விரைவில் நிறைவேறுதற்காகவும் பிரபந்தத் தொடக்கத்திலே ஆசீர் நமஸ்கார வஸ்துநிர்த்தேசங்களாகிற மங்களாசரணம் அனுட்டிப்பதொரு முறைமையுண்டு; ஆழ்வார் 'நாம் ஒருப்ரபந்தம் பண்ணவேணும்' என்று கருதியிருந்து நிருமித்ததன் றிகே * நிரம்பினவேரி நெளிக்குமாபோலே நிமிகிறவாய்கரையுடைந்து புறப் பட்ட சொற்கள் இவர்பாசுரத்தாலே லோகத்தைத்திருத்தத் திருவுள்ளம்பற்றின எம்பெருமானுடைய நினைவாலே ஸகலலக்ஷண ஸம்பந்நமாய்த் தலைக்கட்டின ப்ர பந்தமாகையாலே இந்த மங்களாசரணமும் கோல்விழுக்காட்டாலே பலித்தது. எங்ஙனே யென்னில்; * துயரறுசுடரடி * என்பதனால் வஸ்துநிர்த்தேசரூபமான மங்களம்; * தொழுது * என்பதனால் நமஸ்காரரூபமங்களம்; * எழு * என்பத னால் ஆசீஸ் எனப்படும் மங்களம்.

[திருவாய்மொழி பத்துப்பத்தாக அவதரித்தவழகை நிரூபித்தல்]

214. திருவாய்மொழி பத்துப்பத்தாக அவதரித்திருப்பதை நோக்கி னால் எம்பெருமான் தசாவதாரங்கள் செய்ததுபோலே இதுவும் இங்ஙனே பத்து அவதாரங்கள் செய்ததோ! என்னலாம்படியிரா நின்றது. இவ்வளவு மாத்திர மேயன்று; எம்பெருமானுடைய அவதாரங்களுக்கு என்ன என்ன ப்ரயோஜனங் களோ அந்த ப்ரயோஜனங்களெல்லாம் திருவாய்மொழியின் ப்ராதுர்ப்பாவத் திற்குமுள்ளன—என்னுமிடம் ஆழ்வாரருளிச் செயல்களையே கொண்டு வெகு அழகாக நிரூபிக்கப்படுகிறது.

1. சாதுசனம் - நண்ணு. ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்காகவும் கொடிய வர்களைத் தொலைப்பதற்காகவும் எம்பெருமான் அவதரித்தானென்பது "பரித்ரா

அடிமையறவுரிய நோய்களறுக்கும்உடைந்து, ஏற்றரும் வானின்
தாளின் கீழடிக்கீழ் இன்பக்கதிபயக்கும் ஊடேபுக்கு மூவுலகு முருகா

ணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம், ஸம்பவாமி யுகேயுகே.'' என்ற கீதையினால் விளங்குவதுபோலவே "சாதுசனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு இங்குப் பிறந்த வேதமுதல்வன்'' என்கிற பாசுரத்தினாலும் விளங்கும். திருவாய்மொழியின் அவதாரத்திற்கும் இவ்விரண்டு ப்ரயோஜனங்களுள்ளனவென்பது "நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த—பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடி'' என்ற பாசுரத்தினால் விளங்கும். பகவத்ப்ரதிபக்ஷபூதரான ஆஸுரப்ரக்ருதிகள் மண்ணுண்ணவும் பகவத்பக்திபரரான தேவப்ரக்ருதிகள் வாழவும் திருவாய்மொழி அவதரித்ததென்று ஆழ்வார்தாமே அருளிச்செய்தாரிறே. ஆகவே ஸாதுபரித்ராண துஷ்க்ருத்விநாசார்த்தமாக அவதாரம் என்பது வாச்யனான எம்பெருமானுக்கும் வாசகமான திருவாய்மொழிக்கும் ஒத்ததாயிற்று.

2, 3, 4, மயர்வற—மாசறுக்கும் தெருள்கொள்ளப் பத்தராவர்.

எம்பெருமான் அஜ்ஞாநத்தைப்போக்கி ஜ்ஞானபக்திகளைக் கொடுப்பன் என்னுமிடம் * மயர்வற மதிநலமருளினன் * என்கிற பாசுரத்தினால் விளங்கும். அஜ்ஞாந நிவர்த்தகத்வம், ஜ்ஞாநப்ரதத்வம் பக்திப்ரதத்வம் ஆகிற இம்மூன்றும் திருவாய்மொழிக்கு முண்டென்பது மூன்று பாசுரங்களினால் விளங்கும். * ஒலிபுகழாயிரத்திப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே * என்ற பாசுரத்தினால் அஜ்ஞாந நிவர்த்தகத்வமும், * தெருள்கொள்ளச் சொன்ன வோராயிரம் * என்ற பாசுரத்தினால் ஜ்ஞாநப்ரதத்வமும் * தூவாயிரத்திப்பத்தால் பத்தராவர் * என்ற பாசுரத்தினால் பக்திப்ரதத்வமும் தெரிவிக்கப்பட்டன.

5. அடிமையற—உரிய. நம்மைத் தனக்கு அநந்யார்ஹசேஷமாக அவன் அங்கீகரிக்கும் என்னுமிடம் "வெறித்துளபமுடியானே! வினையேனை யுனக்கடிமை அறக்கொண்டாய்'' என்ற பாசுரத்தினால் விளங்கும். திருவாய்மொழியும் நம்மை எம்பெருமானுக்கு அநந்யார்ஹ ஶேஷமாக்குமென்னுமிடம் "தெரியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்து, உரியதொண்டராக்கு முலகமுண்டாற்கே'' என்ற பாசுரத்தினால் விளங்கும்.

6. நோய்களறுக்கும் — உடைந்து. எம்பெருமான் ஸம்ஸாரமாகிற வியாதிக்கு மருந்தாயிருப்பன் என்னுமிடம் "அரியைவணங்கி அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே'' என்ற பாசுரத்தினால் விளங்கும். திருவாய்மொழியும் ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களையும் உருமாய்ந்து போம்படி பண்ணுமென்னுமிடம் "மிடைந்த சொல் தொடையாயிரத்துளிப்பத்து, உடைந்து நோய்களை ஓடுவிக்குமே'' என்ற பாசுரத்தினால் விளங்கும்.

நிற்பரென்னும் ஸாம்யத்தாலே வாச்யன் பத்தினாய தோற்றம்போலே
தோற்றங்களாயிரத்தின் பத்துப் பத்தான விதின் ஆவிர்ப்பாவம்.

---

7. ஏற்றரும்—வானின். எம்பெருமான் பரமபதத்தையளிப்பன் என்னுமிடம் "ஆற்றல்மிக்கான் பெரிய பரஞ்சோதி புக்கவரியே—ஏற்றரும் வைகுந்தத்தையருளும் நமக்கு'' என்ற பாசுரத்தினால் விளங்கும். திருவாய்மொழியும் பரமபத ப்ராப்தியைப் பண்ணிவைக்கு மென்னுமிடம் "கோனைவண்குருகூர்வண் சடகோபன் சொன்ன வாயிரத்துளிப்பத்தும் வானின்மீதேற்றி யருள்செய்து'' என்ற பாசுரத்தினால் விளங்கும்.

8. தாளின்கீழ்—அடிக்கீழ். எம்பெருமான் நம்மைத் திருவடிகளின் கீழ்ச் சேர்த்துக்கொள்ளு மென்னுமிடம் "பெருந்துன்பம் வேரற நீக்கித் தன் தாளின்கீழ்ச் சேர்த்து அவன் செய்யும் சேமம்'' என்ற பாசுரத்தினால் விளங்கும்; திருவாய்மொழியும் அவன் திருவடிகளின்கீழே சேர்த்துவைக்குமென்னுமிடம் "திருமாலாலருளப்பட்ட சடகோபன் சொல்லாயிரத்துளிப்பத்தால், அருளியடிக்கீழிருத்தும்'' என்ற பாசுரத்தினால் விளங்கும்.

9. இன்பக்கதி—பயக்கும். எம்பெருமான் தன்னோடு அந்வயித்தவர்கட்குத் தன்னுடைய அநுபவமாகிற நிரதிஶயாநந்த யுக்தமான ப்ராப்யத்தைக் கொடுப்பன் என்னுமிடம் "தெளிவுற்றுவீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதிசெய்யும் தெளிவுற்ற கண்ணன்'' என்கிற பாசுரத்தினால் விளங்கும். திருவாய்மொழியும் தன்பால் அந்வயித்தார்க்கு பகவதநுபவாநந்தத்தை யுண்டாக்கு மென்னுமிடம் "இங்ஙனே சொன்ன வோராயிரத்துளிப்பத்து, எங்ஙனே சொல்லினு மின்பம்பயக்குமே'' என்ற பாசுரத்தினால் விளங்கும்.

10. ஊடேபுக்கு—மூவுலகு முருகா நிற்பர். எம்பெருமான் தன்னை யநுபவிக்க இழிந்தவர்களை த்ரவத்ரவ்யமாம்படி உருக்கு மென்னுமிடம் * ஊடுபுக்கெனதாவியை யுருக்கி யுண்டிடுகின்ற நின்றன்னை * என்கிற பாசுரத்தினால் விளங்கும். திருவாய்மொழியும் தன்னையநுபவிக்க இழிந்தாரை நீர்ப்பண்டமாக வுருக்குமென்னுமிடம் "தென்குருகூர்ச் சடகோபன் சொல்லாயிரத்துள்ளிவை, ஒன்பதோடொன்றுக்கும் மூவுலகு முருகுமே'' என்கிற பாசுரத்தினாலும், * தோற்றங்களாயிரத்துள் இவையுமொரு பத்தும் வல்லார், ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர் நீராயே * என்கிற பாசுரத்தினாலும் விளங்கும், ஆகவிப்படி பத்து ப்ரகாரங்களாலே எம்பெருமானோடு ஸாம்யத்தையுடைத்தாகையாலே வாச்யனான அந்த ஸர்வேச்வரனுடைய * பத்தினாய தோற்றம் * என்கிற பத்தவதாரம் போலே * தோற்றங்களாயிரம் * என்கிறவிதனுடைய பத்துப்பத்தான ஆவிர்ப்பாவமும் — என்று நிர்வஹித்ததாயிற்று. எம்பெருமான் லோகரக்ஷணார்த்தமாக அவதரித்ததுபோலே திருவாய்மொழியும் லோகரக்ஷணார்த்தமாகவே அவதரித்ததென்று நிரூபித்தபடி.

215. ஐந்திணேஞைன்பதோடு ஒருபத்தென்னுமவைபோலே நூறேசொன்ன பத்துநூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்.

[சிலநிர்த்தேசங்களுக்கு ஸாபிப்ராயத்வ முண்டென்றல்]

215. திருவாய்மொழியில் ஆங்காங்கு நிகமனப்பாசுரங்களில் பல வகையான நிர்த்தேசங்கள் காணப்படுகின்றன. "குருகூர்மாறன் சொல்லாயிரத்துள் ஐந்திணேஞைடைந்தும் வல்லார்" என்று ஓரிடத்திலுள்ளது. அந்தப்பதிகத்தில் [* கெடுமிடராயவெல்லாம் என்பதில்] முன் ஐந்துபாட்டளவும் ஒரு கருத்தும் பின் ஐந்துபாட்டளவும் ஒரு கருத்துமாகையாலே "ஐந்திணேஞைடைந்து" என்று இங்ஙனே பிரித்து அருளிச்செய்யலாயிற்று.

"தென்குருகூர்ச் சடகோபன் சொல்லாயிரத்துள்ளிவை, ஒன்பதோடொன்றுக்கும்" என்று ஓரிடத்திலுள்ளது. அந்தப்பதிகத்தில் [* இன்னுயிர்ச் சேவலும் என்பதில்] ஒன்பது பாட்டுக்கு ஒருகருத்தும் ஒருபாட்டுக்கு ஒரு கருத்துமாகையாலே "ஒன்பதோடொன்றுக்கும்" என்று இங்ஙனே பிரித்து அருளிச்செய்யலாயிற்று. * பாடலோராயிரத்துள் இவையுமொருபத்தும்" என்றாற்போலே 'ஒருபத்தும் ஒருபத்தும்' என்றே பலவிடங்களில் வருவதுண்டு: பத்துப்பாட்டுக்கும் சேர ஒரு கருத்தாகையாலே இங்ஙனே ஒருபத்தாகவே தொகுத்து அருளிச்செய்யலாகிறது.

கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே நூறுநூறாகச் சொன்ன ஆயிரம் என்கிறபொருள் தோன்ற "நூறே சொன்ன வோராயிரம்" என்றும், [பத்து நூற்றுளிப்பத்து என்றவிடத்தில்] பத்து நூறு என்றும் இங்ஙனே சதகத்தைப் பிரித்துச்சொன்னது சதகந்தோறும் வெவ்வேறு கருத்து என்பது பற்றியாம். * தெரியச்சொன்ன வோராயிரம் * மிக்க வோராயிரம் * அவாவிலந்தாதிகளாலிவையாயிரமும் * என்று ஆயிரத்தையும் சேரச்சொன்னது ஆயிரத்துக்கும் சேர ஒரு கருத்து என்பது பற்றியாம். ஆகவே *ஐந்திணேஞைடைந்தும்* இத்யாதிகளான நிர்த்தேசங்களெல்லாம் ஸாபிப்ராய மென்றதாயிற்று.

[இதில் "ஐந்திணேஞைடைந்தும்" என்றும் "ஒன்பதோடொன்றுக்கும்" என்றும் "இவையுமொருபத்தும்" என்றும் வருகிறவிடங்களுக்கு என்ன என்ன அபிப்ராயமென்பதைப் பெரியார் பக்கலில் கேட்டு உணரவேணுமென்று திருவுள்ளம்பற்றி அவ்வபிப்ராய வர்ணநத்திலே இழிந்திலர். "நூறே சொன்ன வோராயிரம்" "பத்துநூறு" என்று நூற்றுக்கணக்காக அருளிச்செய்யுமிடங்களுக்கான அபிப்ராயத்தை [அதாவது, ஒவ்வொரு சதகந்திற்கும் இன்னது அபிப்ராயமென்பதை] மேலே "பரபரனைய்நின்ற" என்று தொடங்கிப் பத்து சூர்ணிகைகளினால் அருளிச்செய்கிறார். * தெரியச்சொன்ன வோராயிரம் * மிக்கவோராயிரம் * என்று ஆயிரமாக அருளிச்செய்வதற்கான அபிப்ராயத்தை [அதாவது ஆயிரத்துக்கும் சேர இன்னது அபிப்ராயமென்பதை] இந்தக்ரந்தத்தின் கடைசி சூர்ணிகையினால் அருளிச்செய்கிறார்]

216 பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும்போலே நூற்றுக்கு உபதேசப்பத்து.

[ஒவ்வொரு சதகத்திற்கும் உபதேச பரமான பதிகம் பிரதானமென்றல்]

216. ஒரு செய்யுள் இருந்தால் அதிலே வினைமுற்று ப்ரதானமாயிருக்கும்; க்ரியையோடே தலைக்கட்ட வேண்டுகையாலே. ஆகவே பாட்டுக்கள் தோறும் க்ரியாபதம் ப்ரதானமாயிருக்கு மென்னத்தட்டில்லை. ஒவ்வொருபதிகத்திலும் ஒவ்வொருபாட்டு ப்ரதானமாயிருக்கும். அதாவது, * அஞ்சிறையமடநாராய் என்கிற பதிகத்திற்கு அபராதஸஹத்வம் என்கிற குணம் ப்ரமேயம் என்றால் "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்கிற பாசுரத்தில் நோக்காக அந்தப்ரமேய நிஷ்கர்ஷம் பண்ணுகையாலே, இப்படி ஒவ்வொரு பதிகத்திற்கும் ஒவ்வொரு பாசுரம் உயிர் நிலையாயிருக்கும். இதுபோலவே நூறுபாட்டுக்குப் பரோபதேசபரமான பத்துப்பாட்டுக்கள் ப்ரதானமாயிருக்கும்.—செய்யுள்களுக்கு வினைமுற்றில் நோக்காயிருப்பதுபோலவும், பதிகத்திற்கு நிதானஞ்சொல்லுமொருபாட்டிலே நோக்காயிருப்பதுபோலவும், நூறுபாட்டுக்குப் பரோபதேசபரமான பத்துப்பாட்டிலே நோக்காயிருக்குமென்றதாயிற்று.

"பிணங்கியமரர் பிதற்றும் குணம்" என்கிறபடியே நித்யஸூரிகளும் தாம்தாம் அநுபவித்த குணங்களின் பெருமைகளைச்சொல்லி ஸரஸவிவாத கோலாஹலம் பண்ணும்படியிருக்கிற அவனுடைய பரத்வ ஸௌலப்ய ப்ரயுக்தமான குணவிசேஷங்களைத் தனித்துத் தம்மால் புஜித்து முடிக்கவொண்ணாமையாலே "அடியார்கள் குழாங்களை—உடன்கூடுவதென்றுகொலோ" என்று நித்யவிபூதியிலுள்ள ரஸிகர்களோடு சேர்க்கையைத் தேடினவளவில் தேசவிப்ரகர்ஷத்தாலே அது கிடையாதொழியவே, இங்குள்ள ஸம்ஸாரிகளினுடைய குற்றம் குறைகள் பாராதே பகவத்குணங்களிலே மூட்டித்திருத்திக் கூட்டிக்கொள்ள வேண்டி உபதேசத்திலே ஒருப்படுகிறாராகையாலே, ஒவ்வொரு சதகத்திற்கும் உபதேசபரமான ஒவவொருபதிகம் ப்ரதானமாயிருக்குமென்பது மிகவும் பொருந்தும். ஒவ்வொரு சதகத்திலும் பரோபதேசபரமான பதிகம்யாதென்னில்;—

முதற்பத்தில்—வீடுமின்முற்றவும்.
இரண்டாம்பத்தில் கிளரொளியிளமை
மூன்றும்பத்தில்—சொன்னால்விரோதம்.
நாலாம்பத்தில்—ஒன்றுந்தேவு.
அஞ்சாம்பத்தில்—பொலிகபொலிக.
ஆறும்பத்தில்—நல்குரவுஞ்செல்வும்.
ஏழாம்பத்தில்—இன்பம்பயக்க.
எட்டாம்பத்தில்—எல்லியுங்காலையும்.
ஒன்பதாம்பத்தில்—மாலைநண்ணி.
பத்தாம்பத்தில்—கண்ணன்கழலிணை.

நாலாவது ப்ரகரணத்தில் ஒவ்வொரு சூர்ணிகையிலும் இவ்வர்த்தம் விசதமாகும்.

217 பகவத்பக்தபரங்கள் ஆச்ரயண விதிசேஷங்கள்.

218 பரத்வகாரணத்வவ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்யகாமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்தி ஹரத்வவிசிஷ்டன் மயர்வை

[பாகவதபரங்களான திருவாய்மொழிகளுக்குத் தாத்பர்யமின்னதென்றல்.]

217. எம்பெருமானைப்பற்றின ஸ்துதியாக ப்ரவ்ருத்தமான திருவாய்மொழியாயிரத்தில் * பயிலுஞ்சுடரொளி முதலான பாகவதபரங்களான திருவாய்மொழிகள் பகவதாச்ரயண விதிக்கு சேஷபூதங்கள். அதாவது, "திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்துய்மினோ" என்பது முதலான பாசுரங்களினால் விதிக்கப்படுகிற பகவதாச்ரயணமானது பாகவதர்களை யடிபணிந்தாலல்லது ஸித்திக்கமாட்டாதாகையாலே பகவதாச்ரயணவிதிக்கு இவை சேஷபூதங்களென்கை

*ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத என்று ஸ்வர்க்ககாமனை புருஷனைக்குறித்து ஜ்யோதிஷ்டோமவிதி காண்கிறது. இந்த விதி மாத்திரமன்றிக்கே ப்ரயாஜாதி விதிகளும் (வேதத்தில்) காண்கின்றன. ப்ரயாஜாதிகளின் அநுஷ்டானமில்லையாகில் ஜ்யோதிஷ்டோமாநுஷ்டானம் பயனளிக்கமாட்டாது. ஆகவே ப்ரயாஜாதிவிதிகள் ஜ்யோதிஷ்டோம விதிக்கு சேஷபூதம் என்று கொள்ளப்படுகிறது, அது போலவேயிங்கும் பாகவதர்களை ஆச்ரயிக்க வேணுமென்கிற விதியானது பகவதாச்ரயணவிதிக்கு சேஷபூதமாகக்கொள்ளப்படவேணுமென்றதாயிற்று.

[பரத்வம் முதலிய குணங்களோடுகூடிய எம்பெருமான் தமக்குப்பிறப்பித்த தசா விசேஷங்களைப் பத்துத்தோறும் வெளியிடுகிறாரென்று சுருக்கமாக வாக்கியார்த்தமருளிச் செய்தல்]

218. ஒவ்வொரு பத்திலும் எம்பெருமானுக்கு இன்ன இன்ன குணம் பிரதிபாதிக்கப்படுகின்றதென்பதும், அந்தந்த குணத்தோடுகூடியவனாக அநுஸந்திக்கப்பட்ட எம்பெருமான் ஒவ்வொருபத்திலும் ஆழ்வார்க்கு உண்டாக்கின பேறு இன்னதென்பதும் இந்த சூர்ணிகையில் நிரூபிக்கப்படுகிறது.

முதற்பத்தில்—பரத்வம்
இரண்டாம்பத்தில்—காரணத்வம்.
மூன்றாம்பத்தில்—வ்யாபகத்வம்.
நான்காம்பத்தில்—நியந்த்ருத்வம்.
ஐந்தாம்பத்தில்—காருணிகத்வம்.
ஆறாம்பத்தில்—சரண்யத்வம்.
ஏழாம்பத்தில்—சக்தத்வம்,
எட்டாம்பத்தில்—ஸத்யகாமத்வம்.
ஒன்பதாம்பத்தில்—ஆபத்ஸகத்வம்.
பத்தாம்பத்தில்—ஆர்த்திஹரத்வம்.

யறுக்க, தத்வவேதநமறப்பற்று ஜ்ஞப்திபலமுக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து, மோக்ஷபலவ்ருத்திசெய்ய அர்த்தித்து, புருஷார்த்தபலாங்யருசி

என்று குணங்களின் அடைவுகாண்க. இன்னபத்தில் இன்ன குணம் நிரூபிக்கப்படுகின்றதென்பதை நாம் எங்ஙனே தெரிந்து கொள்வதென்னில்; அடுத்த சூர்ணிகை முதலாகப் பத்து சூர்ணிகைகளிலும் முதல் வாக்கியத்தினால் அது நன்கு மூதலிக்கப்படுகின்றமை காண்க.

1. "பரபரன் ஆய்நின்ற வளவேழ்வைப்பாமவையுளும்பர் வானவாதிபதி" என்னுமளவும் தொகுக்கப்பட்டுள்ள சந்தைகள் பரத்வகுணநிரூபகங்கள்.

2. "சோராத மூவா வேர் முதலாயுலகம் படைத்தவன்" என்னுமளவும் தொகுக்கப்பட்டுள்ள சந்தைகள் காரணத்வ நிரூபகங்கள்.

3. "முழுதுமாய் எங்கணு மொழிவற அருவாகிநின்று தோய்விலன்' என்னுமளவும் தொகுக்கப்பட்டுள்ள சந்தைகள் வ்யாபகத்வ நிரூபகங்கள்.

[இப்படியே மேல் பிரகணத்திலுள்ள ஒவ்வொரு சூர்ணிகையினுடையவும் முதல் வாக்கியங்கொண்டு அறிவது.]

1. பராத்பரனாய், 2. அந்த பரத்வத்திற்கு ப்ரகாசகமாம்படி ஸகல ஜகத்காரண பூதனாய், 3. லோகத்திலுள்ள கார்யகாரணங்கள் போலல்லாமல் உபாதாநகாரணமும் தானேயாகையாலே கார்ய பூதஸமஸ்தவஸ்துக்களுக்கும் வ்யாபகனாய், 4. அந்த வ்யாப்தியானது ஆகாச வ்யாப்திபோலல்லாமல் அந்தராத்மதயா வ்யாப்தியாகையாலே ஸர்வநியந்தாவாய், 5. அந்த பரத்வம் முதலியவற்றைக்கண்டு அஞ்சவேண்டாதபடி பரமகாருணிகனாய், 6. இப்படி காருணிகனாகையாலே ஸர்வசரண்யனாய், 7. சரண்யக்ருத்யமான அநிஷ்ட நிவர்த்தநமென்ன இஷ்டப்ராபணமென்ன இவற்றைச் செய்வதற்குத்தகுந்தவாறு ஸர்வசக்தியுக்தனாய், 8. அந்த சக்தியாலே நித்யமாகக்கல்பித்த பத்நீபரி ஜநாதிகளையுடையனாகையாலே ஸத்யகாமனாய், 9. ஸௌஹ்ருதபரனாயிருந்து விடாதே பிரளயம் முதலிய ஆபத்துக்களிலே உதவி லீலா விபூதியைரக்ஷிக்கையாலே ஆபத்ஸகனாய், 10. இப்படி ஆபத்பந்துவாகையாலே ஸம்ஸாரதாபதப்தரான அடியவர்கட்கு ஆர்த்திஹரனாய்—இங்ஙனே பத்துப்பத்தாலும் பிரதிபாதிக்கப்பட்ட பத்துகுணத்தோடும் கூடியிருக்கிற எம்பெருமான் * மயர்வற மதிநல மருளினன் * என்கிறபடியே பக்திரூபாபந்ந ஜ்ஞானத்தையருளும் முகத்தாலே அஜ்ஞானத்தை ஸவாஸநமாகப் போக்கியருளினவளவில்,

1. [தத்வவேதநமறப்பற்று] * மறப்பனோ வினி யானென்மணியையே * என்கிறபடியே—எம்பெருமானைப்பற்றின ஞானமாகிற தத்வவேதநத்தில் மறப்பு இல்லாமையாகிற பேறு தாம் பெற்றபடியை முதற்பத்தில் வெளியிட்டார்.

159932 சென்னை-600 0

...யொழிந்து, விரக்திபலராகம் சழியமிக்கு, ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ...பலோபகாரக் கைம்மாறின்றி, க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருதமானத்தை

"மறப்பற்று" என்றது "மறப்பறவென்னுள்ளே மன்னினன்" என்கிற பாசுரத்தை விஷயவாக்யமாக நினைப்பூட்டினபடி.

2. [ஜ்ஞப்திபலமுக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து.] * எம்மாவீட்டில் ஸ்வரூபாநுரூபமாக மோக்ஷநிஷ்கர்ஷம் பண்ணுகையாகிற பேறு ஆழ்வார் எய்தியது. "தத்வஜ்ஞாநாந்முக்தி:" என்கிறபடியே மோக்ஷமென்பது தத்வஜ்ஞானத்தின் பலனாகையாலும், கீழ்ப்பத்தில் தத்வஜ்ஞானம் பெற்றதனாலும் "ஜ்ஞப்திபலமுக்தி" என்றருளிச் செய்யப்பட்டது. "தலைசேர நிஷ்கர்ஷித்து" என்றது "நின்செம்மா பாதபற்புத் தலைசேர்த்து" என்கிற பாசுரத்தை விஷயவாக்யமாக நினைப்பூட்டினபடி: மோக்ஷநிஷ்கர்ஷம் பண்ணினது * எம்மாவீட்டில் என்றுகாட்டினதாயிற்று.

3 [மோக்ஷபலவ்ருத்திசெய்ய அர்த்தித்து.] கீழ் இரண்டாம்பத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட மோக்ஷத்திற்குப்பலன் கைங்கர்யமாகையாலே, அந்த கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கையாகிறபேறு மூன்றும்பத்தில் கிடைத்தது. * வழுவிலா வடிமை செய்ய வேண்டுநாம் * என்று ப்ரார்த்தித்ததைத் தெரிவித்தபடி.

4. [புருஷார்த்தபலாந்யருசியோழிந்து.] அந்த புருஷார்த்தத்திற்குப் பலன் அந்யருசிநிவ்ருத்தியாகையாலே அப்படிப்பட்ட பேறு பெற்றமை நாலாம்பத்தில் "கண்டு கேட்டுற்று மோந்து" என்கிற பாட்டில் * ஐங்கருவி கண்டவின்பம்—சிற்றின்பம்—ஒழிந்தேன் * என்றதனால் தெரிவிக்கப்பட்டது. "புருஷார்த்த பலாந்யருசியொழிந்து" என்றவிதில் (பல) என்பதற்கு எங்கே அந்வயமென்று சங்கிக்கக்கூடும். (ஒழிந்து) என்பதற்கு ஒழிவுபெற்று என்று பொருளாகையாலே ஏகதேசமான ஒழிவில் அந்வயிக்கிறது. புருஷார்த்தபலமான அந்யருசியொழிவைப்பெற்று என்றபடி.

5. [விரக்திபலராகம் சழியமிக்கு,] கீழ்ப்பத்தில்பெற்ற இதரவிஷய விரக்திக்குப்பலன் பகவத்விஷயராகம் மிகுதலாதலால் அந்தப்பேறு அஞ்சாம் பத்தில் பெற்றதாயிற்று. * கழியமிக்கதோர் காதலளிவள் * என்கிற பாசுரத்தை நினைப்பூட்டுதற்காகக் சழியமிக்கு என்றது

6. [ப்ரேமபலோபாயத்தே புகுந்து.] கீழ்ப்பத்தில் பெற்ற நிரவதிகப்ரேமத்திற்குப் பலன் உபாயவரணமாகையாலே * அலர்மேல்மங்கையுறைமார்பா !— உன் அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று உபாயவரணமாகிற பேற்றை ஆறும் பத்திலே பெற்றாராயிற்று. "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்கிற சந்தையை நினைப்பூட்டுதற்காகவே "உபாயத்தே புகுந்து" என்றது. இவ்விடத்திலும் (பல) என்பது, புகுந்து என்பதன் ஏகதேசமான புகுதலிலே அந்வயிக்கிறது.